மெய்ப்பொருள்
காண்பதறிவு

1942 படிக்கட்டு 2006

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## சுப்பிரமணியம் - மாலதி மண்டபம்
## திறப்பு விழா மலர்

**30.04.2006**





## கொழும்புத் தமிழ்ச் சங்கம்

7,57 வது ஒழுங்கை, கொழும்பு-06 தொலைபேசி : 2363759

மின்னஞ்சல் : tamilsangam@sltnet.lk வெப்தளம் : www.colombotamilsangam.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கட்டு 2006

1942

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## சுப்பிரமணியம் - மாலதி மண்டபம்

## திறப்பு விழா மலர்

## 30.04.2006

மெய்ப்பொருள்
காண்பதறிவு


## கொழும்புத் தமிழ்ச் சங்கம்

7, 57 வது ஒழுங்கை கொழும்பு - 06. தொலைபேசி : 2363759
மின்னஞ்சல் : tamilsangam@sltnet.lk வெப்தளம் : www.colombotamilsangan.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க கீதம்

வாழியஎம் தமிழ்ச்சங்கம் வளர்ந்தெழுக தமிழ்மொழியே
ஆழிசூழும் இலங்கைதனில் அழகுதுறை நகர்கொழும்பில்
ஏழிசை போல் தமிழ்மொழியும் இசைகொண்டு வாழியவே
இயலிசைநா டகமோடின் கலைபலவும் இசைந்தொலிக்க

அழகொழுகும் வனப்புகளும் இளமையொடு இனிமைதரப்
பழகுதமிழ் பயின்றமுதம் பொழிந்துநிதம் பொலிந்திடவே
பல்லோரும் பணியாற்றப் பரிந்தேற்றி வளம்பாய்ச்சித்
தொல்லுலகில் புகழ்மணக்கத் தொழுதேத்தும் தமிழணங்கே

முச்சங்க முழுப்பணியை முழுவுலகும் முழங்கவைக்கும்
எம்சங்கம் தமிழ்ச்சங்கம் என்றென்றும் வாழியவே
சங்கொடுதா மரைஏடும் சிறந்திடுமெம் இலச்சினையே
மங்கலநல் அறிவாய்மெய்ப் பொருள்கண்டு வளருதியே

கவியாக்கம் : பன்மொழிப்புலவர்
**த. கனகரத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

**மங்கல விளக்கேற்றல்**

**சுப்பிரமணியம் - மாலதி மண்டபத்தைத் திறந்து வைத்தல் : உயர்திரு. சுப்பிரமணியம் தம்பதிகள்**

**தமிழ் வாழ்த்து**

**திரு.சி.அமிர்தலிங்கம்** (உறுப்புரிமைச் செயலாளர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)

**வரவேற்புரை**

**திரு.ஆ.குகமூர்த்தி** (துணைத்தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)

**ஆசியுரை**

**பிரம்மஸ்ரீ சிவாகம திலகம், சிவாகம பூஷணம். பா.சண்முகரட்ணசர்மா (ஜே.பி)**

(பிரதம குரு. ஸ்ரீபால செல்வவிநாயகர் தேவஸ்தானம், கப்பித்தாவத்தை, கொழும்பு)

**தலைமையுரை**

**திரு. குமாரசாமி சோமசுந்தரம்** (தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)

**வாழ்த்துரை**

**உடுவை எஸ்.தில்லை நடராசா** (மேலதிகச் செயலாளர் கல்வி அமைச்சு)

**சிறப்புரை**

''தமிழ்ச்சங்கங்களும் கொழும்புத் தமிழ்ச் சங்கமும்''

**கலாபூஷணம் சித்தாந்த பண்டிதர் சைவப்புலவர் சு.செல்லத்துரை** (இளைப்பாறிய அதிபர்)

**மலர்வெளியீட்டுரை**

**கலாநிதி வ.மகேஸ்வரன்** (சிரேஷ்ட விரிவுரையாளர் தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக் கழகம்)

**கௌரவித்தல்**

**திரு.ஆ.மா.சுப்பிரமணியம் - மாலதி தம்பதிகள்** (மண்டபத்தை உபகரித்தவர்கள்)

**கலைநிகழ்ச்சி**

**நடனம்**

சைவ மங்கையர் கழக இசை நடனக் கல்லூரி மாணவிகள்

நெறியாள்கை : திருமதி சந்திரிக்கா சூரியகலா ஜீவானந்தன்

**நன்றியுரை**

**பொதுச் செயலாளர்** .கொழும்புத் தமிழ்ச் சங்கம்

**தமிழ்வாழ்த்து**

**திருமதி. அ. புவனேஸ்வரி** (பரிசில் நிதியச் செயலாளர் கொழும்புத் தமிழ்ச் சங்கம்)

**நிகழ்ச்சித் தொகுப்பு**

**திரு.சி. எழில்வேந்தன்**

(ஆட்சிக்குழு உறுப்பினர் கொழும்புத் தமிழ்ச் சங்கம்)

## அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**திரு. இ.க.கந்தசுவாமி**

(பொதுச் செயலாளர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு சுப்பிரமணியம் தம்பதிகள்



திரு சுப்பிரமணியம் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் மூன்றாம் மாடி மண்டபத் திறப்பு விழா, எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதி நிகழ உள்ளதென அறிந்து மகிழ்ச்சி அடைவதோடு, இம் மண்டபம் அமைக்க உதவிய அன்பருக்கும் எங்கள் மனம் நிறைந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பணிகள் இன்று பன்முகத்தன்மை கொண்டவையாக விரிவடைந்துள்ளன. இந்த வகையில் இச்சங்கத்தை வழிநடாத்திச் செல்லும் இதன் ஆட்சிக்குழுத் தலைவர், உறுப்பினர் அனைவருமே பாராட்டிற்குரியவர்களே. கடந்த காலங்களில் இச்சங்கத்தை வழி நடத்தியவர்களையும் இத்தருணத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது.

இன்று மேலைநாட்டு கலாசாரம் எமது பாரம்பரிய சமய விழுமியங்களையும், கலை, கலாசார மரபுகளையும் வேகமாக மழுங்கடித்துக் கொண்டிருக்கக்கூடிய தருணத்தில், அவற்றைப் பேணிக் காக்கும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு. இத்தகைய நெருக்கடியான காலகட்டத்தில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் பணிகள் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றன எனக் கூறத் தேவையில்லை. அவர்களது பணி மென்மேலும் வளர்ந்து சமுதாயம் பயன்பெற இறையருள் துணை நிற்கப் பிரார்த்திக்கிறோம்.

**சுவாமி ஆத்மகனானந்தா**

தலைவர். இராமகிருஷ்ணமிசன், கொழும்பு.

29.03.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர்
# குமாரசாமி சோமசுந்தரம்
# வழங்கிய வாழ்த்துச் செய்தி

தமிழ் எமது தாய் மொழியும் தந்தை மொழியும் ஆகும். எந்தையும் தாயும் எம்முந்தையரும் இனிது பேசிமகிழ்ந்த மொழி, தமிழ். அத்தகைய இன்பத் தமிழை, அதன் சீரிளமைத் திறன் போற்றி, செம்மொழிப் பண்பினை ஓம்பி, மேலும் வளர்த்து வளம் பெருக்கி, தமிழுக்குப் பெருமை சேர்க்க வேண்டியது எம் பொறுப்பும் கடமையுமாகும்.

தலைநகரில் வாழ்கின்ற தமிழ் ஆர்வலர்கள், கொழும்புத் தமிழச்சங்கத்தை நிறுவிக் கடந்த அறுபத்துநான்கு ஆண்டுகளாக, நிறுவன ரீதியில், தமிழ்ப் பணிகளிலும், தமிழ் வளர்க்கும் பணிகளிலும் ஆர்வங்கொண்டு ஈடுபாட்டுடன் அயராது உழைத்து வருவதை யாவரும் அறிவர். தமிழ் எங்கள் உயிர், எங்கள் மூச்சு அதனைக் காப்பது எங்கள் விரதம்.

அன்று தமிழை மன்னர்கள் ஓம்பி வளர்த்தனர். இன்று மக்களே மன்னர்கள் என்ற வகையில், மக்களிடமே அந்தப் பொறுப்பு உள்ளது என்பதை முதலில் நாம் உணர்ந்து கொள்ளுதல் அவசியம். இந்தப் பொறுப்பினை நன்குணர்ந்து கொண்டவர்கள், திரு. ஆ. மா. சுப்பிரமணியம் அவர்களும் அவரது அன்புப் பாரியார் திருமதி மாலதி சுப்பிரமணியம் அவர்களும் ஆவர். இருமனங்கலந்தது திருமணம். அவ்வாறே தம்பதிகள் இருமனங்கலந்து ஒரு மனத்துடன் ஈதல், அறம் எனப்படுகின்றது. கொழும்புத் தமிழ்ச் சங்கத்திற்கு, மூன்றாம் மாடியில், பல இலட்சம் ரூபா செலவில், பெரும் மண்டபம் ஒன்றினை அமைத்து. அழகுபடுத்தி, மினனொளி, மின்விசிறி உட்பட்ட பல வசதிகளுடன் வழங்கியுள்ளார்கள், அவர்கள் செய்தது அறம்.

"உடம்பை வளர்த்தோன் உயிர் வளர்த்தோனே" - திருமூலர்வாக்கு தமிழ்ச்சங்கத்தின் உடம்பாக விளங்குகின்ற உட்கட்டமைப்பினை வளர்த்ததன் மூலம். சுப்பிரமணியம் தம்பதிகள், தமிழ் ஆகிய உயிரை வளர்க்க உறுதுணையாயினர். தமிழுலகம் நன்றி கூறுகின்றது. தம்பதிகள் மேலும் பல அறப்பணிகள் புரிந்து பிறர் நலம் பல பேணும் பொருட்டு நீண்ட ஆயுளையும், நிறைந்த ஆரோக்கியத்தையும் நிறைவான செல்வத்தையும், தாராளமான தர்ம சிந்தனையையும் அருளுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுதல் செய்கின்றோம். வாழ்க, வளர்க.

**குமாரசாமி சோமசுந்தரம்**
தலைவர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் புதிய கட்டிடத் திறப்பு விழா வைபவம்

# வாழ்த்துரை

கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாகப் பல சவால்களையும் தடைகளையும் சந்தித்து, அவற்றையெல்லாம் வெற்றிகரமாக எதிர்கொண்டு தலை நகரில் பாராட்டத்தக்க முறையில், சகல தமிழர்களும் பெருமிதம் கொள்ளும் முறையில் தமிழ்ப்பணியாற்றிவரும் தமிழ்ச்சங்கம் இன்று புதிய உச்சங்களையும் ஏற்றங்களையும் கண்டு வருகின்றது. இவற்றைப் பிரதிபலிக்கும் வண்ணம் பல தமிழ் நெஞ்சங்களின் சிந்தனை, தியாகம், அர்ப்பணிப்பு, பங்களிப்பு இவற்றால் இன்று புதிய மேல்மாடிக் கட்டடம் ஒன்று திறந்து வைக்கப்படுவது தமிழர்களின் நெஞ்சங்களைப் பூரிக்க வைக்கின்றது. இச்சந்தர்ப்பத்தில், தமிழ்ச்சங்கத்தின் பணிகளிலும் பங்களிப்புகளிலும் ஆர்வத்துடன் இணைந்து பணியாற்றி வந்துள்ள நான், தமிழ்ச்சங்கம் மேலும் பல உச்சங்களையும் ஏற்றங்களையும் காணவேண்டுமென்ற எதிர்ப்பார்ப்புகளுடன் உளமார வாழ்த்துகின்றேன்.

கொழும்பில் வாழ்கின்ற தமிழ் மக்கள் இச்சந்தர்ப்பத்தில் தமிழ்ச் சங்கத்தின் கடந்த காலப் பங்களிப்புகளையும் பணிகளையும் சற்று நினைவு கூர்ந்து அதன் எதிர்கால பணிகளுக்குத் தமது மேலான ஆதரவையும் ஒத்துழைப்பினையும் வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றேன். தமிழ்ச சங்கத்தின் எதிர்கால மேம்பாடும் ஏற்றமும் இவ்வாதரவிலும் ஒத்துழைப்பிலுமே பெரிதும் தங்கி இருக்கின்றது என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் இதுவரை ஆற்றிவந்துள்ள பணிகளை முழுமையாகப் பட்டியல் போட்டுக்காட்டுவதும் அப்பணிகளின் வரலாற்று, கலாசார முக்கியத்தும் பற்றி விரிவாக ஆராய்வதும் இச்சிறு வாழ்த்துரையில் கடினமான ஒரு பணியாகும். ஆயினும் இக்குறிப்பிட்ட ஆய்வுத் தலைப்பில், தமிழார்வம் மிக்க பல்கலைக்கழகத்தில் ஆய்வுப் பயிற்சி பெற்ற ஒரு இளம் கல்விமானை ஆராயச் சொல்வது மிகப் பொருத்தமான ஆலோசனை எனக் கருதுகின்றேன். பல்வேறு கொழும்புத் தமிழ்ச் சங்கச் சான்றோர்கள், தமது பொருளையும் உழைப்பையும் நேரத்தையும் சிந்தனைகளையும் வழங்கிச் சங்கத்தின் இன்றைய மேன்மைக்குக் காரண கர்த்தாக்களாக விளங்கியுள்ளனர். இவையாவும் முறையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணப்படுத்தப்பட்டுப் புதிய தலைமுறையினர் தமிழ்ச்சங்கத்தின் பணிகளையிட்டுப் பெருமை கொள்ளும் வண்ணம் ஆவன செய்யப்படல் வேண்டும் என்பது எமது வேண்டுகோள். தமிழ்ச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவின் போது வாழ்த்தப்பட வேண்டியவர்கள், பாராட்டப்பட வேண்டியவர்கள் இன்றளவும் அதன் மேம்பாட்டில் அக்கறையையும் ஈடுபாட்டையும் செலுத்தி வரும் சங்கச் சான்றோர்களாவர். இவ்விடத்து அவர்களுக்குத் தமிழ்த்தாயின் அருள்கிட்ட வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் இதுவரை காலம் ஆற்றி வந்த அரும்பணிகளோடு, அதன் ஒரு அங்கமாகத் 'தமிழியல் ஆய்வுத் துறையொன்று' உருவாக்கப்படல் வேண்டும். இலங்கை வாழ் தமிழர்களின் சமூக, பொருளாதார, கலாசார, கல்வி மேம்பாட்டுக்கான பல்துறை ஆய்வுகளில் அக்கறை செலுத்துவதோடு தமிழர் பற்றிய விரிவான ஆய்வுத்தளம் ஒன்றை உருவாக்குவதிலும் தமிழ்ச்சங்கப் பெரியோர்கள் இணைந்து செயற்படுவதால் தமிழர்களுக்கு இல்லாத ஆய்வுநிறுவனப் பற்றாக்குறையை நீக்கிக் கொள்ள முடியும் என யாம் கருதுகின்றோம்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் புதிய மேம்பாடுகளைக் காண வாழ்த்துகின்றோம்.

பேராசிரியர் **சோ. சந்திரசேகரன்**<br>
துணைக்காப்பாளர்<br>
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

26.03.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத் தமிழ்ச் சங்கம் - கட்டடப் பணி

ஆசிரியர் தமிழவேள் இ.க. கந்தசுவாமி
பொதுச் செயலாளர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

தமிழ்மொழி வளர்ச்சிக்காக 1942ஆம் ஆண்டு அமைந்த கொழும்புத் தமிழ்ச் சங்கம் 1957 ஆம் ஆண்டு 57ஆம் ஒழுங்கை கொழும்பு - 6ல் உள்ள 42 பேர்ச் நிலத்தை விலையாகப் பெற்றது. அந்நிலத்திலிருந்த பழைய இல்லம் தமிழ்ச் சங்கப் பணிகளுக்குப் போதியதாக அமையாததால் ஓர் புதிய கட்டடம் அமைக்கவென இந்நிலத்தை விலையாகப் பெற உறுதுணையாகவிருந்த சங்க முன்னாட் தலைவர் திரு. மு. வயிரப்பிள்ளையும் அவரது ஆட்சிக்குழு உறுப்பினர்களும் முயன்றனர். 1971ல் இதற்கான அத்திவாரம் இடம் பெற்றதாயினும் இது நிறைவு பெறவில்லை.

1975ல் நான் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்று எனக்கு திரு. மு. வயிரவப்பிள்ளை அவர்களுடன் இணைந்து இப்புதிய கட்டடம் அமைக்கப் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. அவ்வாண்டு கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் கோயில் பிரதமகுரு பா. சண்முகரட்ணசர்மா அவர்கள் இக்கட்டடப் பணியைத் தொடக்கி வைத்தார்.

கட்டட வரைப்படம் கட்டடக் கலைஞர் வி. எஸ். துரைராசா அவர்களினால் தயாரிக்கப் பெற்றது. பிரதிக் கணக்காளர் நாயகமும் அப்போதைய சங்கத் தலைவருமான திரு. மு. வயிரப்பிள்ளை கட்டடப்பணிக்கு நிதி சேகரிக்க தமது ஊர்தியைப் பயன்படுத்தி ஓரளவு நிதிசேர்த்து உதவினார். நிதி சேகரிப்புக்குத் துணைத்தலைவர்களும் ஆட்சிக்குழு உறுப்பினர்களும் உதவினர் 500/-, 1000/-, 5/-, 10/- என நிதி சேர்ந்தது. வெள்ளவத்தை நெசவு ஆலைத் தொழிலாளர்களும் இந்நிதிக்கு பங்களிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது. ஒப்பந்தக்காரர் திரு லாபீர் உதவியுடன் முதலிருமாடிகளும் நிறைவாகின. கட்டடப் பணியை பூர்த்தி செய்ய ஆசிரியர் என். டி. பீரிஸ் அவர்களின் உறவினர் முந்தல் ஊரைச் சேர்ந்த அன்ரனி என்பவர் உறுதியான பாலை மரத்தில் செய்த யன்னல்களை இவ்விரு மாடிகளுக்கும் செய்து அன்பளிப்புச் செய்தார். அப்போது பொருளாளராக இருந்த ஆசிரியர் இ. விக்கினராசா அவர்கள் இக்கட்டட நிதிச் சேகரிப்பில் பெரிதும் ஈடுபட்டவர், அதிட்டச் சீட்டு முறையும் 'கப்பலோட்டிய தமிழன்' திரைப்படக் காட்சியும் நிதி சேர்க்க உதவின.

சங்க முன்புறக் கட்டடத் தொகுதியின் 3ம்மாடி, இலங்கை வானொலித் தமிழ்த் துறைஅதிபர் கலாநிதி க.செ. நடராசா தலைவராக இருந்த காலத்தில் நிறைவுற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி பணிக்கு இவரது முயற்சி பெரிதும் உதவியது. இவரது முயற்சியும் புதிய கதிரேசன் மண்டபத்தில் இடம்பெற்ற கிறேசி கோமாளிகள் நாடகமும் நிதிசேகரிக்க உதவியது இதற்கடுத்த 4ம் மாடி கொழும்பில் பிரபல நிறுவனம் ஒன்றின் பிரதம கணக்காளரும் சங்கத் தலைவருமான திரு. வ. மு. தியாகராசா அவர்களின் காலத்தில் நிறைவுற்றது. இப்பணிக்காலத்தில் சீமெந்து பைக்கற் விலை 60/- ரூபாவாக இருந்தது. இந்தியன் ஓவஸ்சீஸ் வங்கியில் கணக்காளராக கடமையாற்றிய திரு. செ. செல்லையா அவர்கள் இக்கட்டட அமைப்புப் பணிகளில் பேருதவி புரிந்தார். 1990 ஆம் ஆண்டு முன்புறக்கட்டிடப் பணிநிறைவுற்றது.

சங்க நிலத்தில் பின் பக்கத்தில் சங்க கட்டடப் பணியைத் தொடர சங்கத்திற்கு எதிரான நீதிமன்ற வழக்கு இடையூறாக இருந்த போதிலும் சட்ட வல்லுநர் திரு. சி. இரங்கநாதன். கியூ. சி. அவர்களின் துணையோடு மேற்படி இடையூறை நீக்க இறையருள் துணைநின்றது. இதன் பயனாகக் கொழும்பு மாநகரசபையின் அனுமதி பெற்றுப் பின்பக்க கட்டிடப் பணிகள் ஆரம்பமாகின. சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்களின் நிதியுதவியுடனும் ஒப்பந்தக்காரர் திரு. செ. இலகுப்பிள்ளை அவர்களின் உதவியுடனும் திரு. செ. குணரத்தினம் அவர்கள் தலைவராக இருந்த காலத்தில் தற்போது அலுவலகம் அமைந்த பகுதி கீழ்த்தளம் நிறைவுற்றது.

தொடர்ந்து நடுப்பகுதிக்கான தூண்கள் அமைக்கும் வேலைகள் இடம்பெற்றன. சங்க முன்னாட் தலைவர் திரு. பொ. சங்கரப்பிள்ளை அவர்களின் நினைவாக அவரது குடும்பத்தினர் சங்கக் கட்டிடப் பணிக்கு 32 லட்சம் ரூபாவைக் கொடுத்து உதவினர்.

இதனால் சங்க நடுப்பகுதி முதல்மாடியும், சங்க அலுவலகத்திற்கு மேலான முதல் மாடியும் அமைக்கப் பெற்றுச் சங்க நூலகப் பணிக்கெனப் பயன் படுத்தப்படுகின்றன.

கலாசூரி இ. சிவகுருநாதன், பேராசிரியர் சோ. சந்திரசேகரன் ஆகியோர் தலைவர்களாக இருந்த காலப்பகுதியில் இப்பணிகள் நிறைவுற்றன.

சங்க முதலாம் மாடியில் அமைந்த நூலகத்தின் திறப்பு விழா சட்டத்தரணி சோ. தேவராசா தலைவராக இருந்த வேளையில் இடம் பெற்றது. இவ்விழாவில் இராமகிருஷ்ணமிசன் தலைவர் சுவாமி ஆத்மகணானந்தா அவர்களும், இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ண காந்தி அவர்களும், பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

(2003 - 2005)ல் திரு. பெரியதம்பிப்பிள்ளை விஜயரத்தினம் தலைமையில் அமைந்த ஆட்சிக்குழு 2ம் மாடியை அமைப்பதில் ஈடுபட்டனர். பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த அமரர் வெ. சபாநாயகம் இப்பணிக்கு மிகவும் உறுதுணையானார் இதனால் 2ம் மாடி நடுப்பகுதியில் நவரட்ணசிங்க மண்டபம் உருவானது. இதனை இவரது மகன் வாகீசன் நல்ல முறையில் அமைத்துக் கொடுத்துள்ளார்.

இரண்டாம் மாடி பிற்பகுதியில் ஐந்து அறைகள் அமைக்கப்பெற்றுள்ளன. ஓர் அறையை சட்ட வல்லுநர் கனக ஈஸ்வரன் அவர்கள் தமது தந்தை முன்னாள் மூதவை உறுப்பினர் கனகநாயகம் பெயரில் அமைத்துள்ளார். இன்னோர் அறை மட்டக்களப்பு பகுதியில் அதிபராக இருந்த தமிழறிஞர் இரா. மயில்வாகனம் பெயரில் இவரது மனைவியும் மகனும் அமைத்துக் கொடுத்துள்ளனர். செல்லம்மா இராஜேந்திரம் பெயரில் ஓர் அறையும், வெள்ளியம்பலம் பாக்கியம் என்ற பெயரில் ஓர் அறையும், அவரது குடுபத்தவர்கள் உதவியால் அமைந்தன ஹரிஸ்அன் மெனுக் நிறுவனம் ஓர் அறையை அமைத்து உதவியுள்ளது. இப்பணிகளில் தொடர்ந்து பணிபுரிந்த நிலையமைப்புச் செயலாளர் ஆசிரியர் மா. சடாட்சரன் அவர்களும் நிலையமைப்புக் குழுவினரும் பாராட்டுக்குரியவர்கள். இவ்வறைகள் தலைநகரிற்கு வரும் அறிஞர்கள் ஆர்வலர்கள் தங்கிச் செல்ல உதவுகின்றன.

தற்போது அமரர் வெ. சபாநாயகம் அவர்களின் உதவியால் பெரியார் ஆ. மா. சுப்பிரமணியம் அவர்கள் 3ம் மாடி நடுப்பகுதியில் ஓர் மண்டபத்தை அமைத்துத் தந்துள்ளார். இவரது பெரும் பணியைப் பாராட்டி மண்டபத் திறப்பு விழா 30.04.2006 ல் நிகழ்கிறது சிறப்பு மலரும் வெளிவருகிறது. பிற்பகுதியிலும் மாடி இன்னும் அமைய வேண்டியுள்ளது. இவையும் விரைவில் அமையும். இவையாவும் சங்கப் பணிகள் சிறக்க உதவும்.

இச்சங்கத்தின் கட்டடப் பணி மகத்தானது. இப்பணி சங்கத்தின் உன்னத வளர்ச்சிக்கும் அதன்பணிகள் பெருகவும் உதவியுள்ளது. வாழைத் தோட்டமாக இருந்த இந்நிலம் இன்று தலைநகரில் வளமான அமைப்பாக விளங்குகிறது. இக்கட்டிடம் தற்போது இந்நாடு முழுவதற்கும் உதவுகிறது.

உலகத்தமிழர்களுக்கும் உதவுகிறது. இன்று எமது சங்கம் உலகப் புகழ் பெற்று விளங்குவதற்கு பெரும் அருளாளர்களின் ஆசியே காரணம். 1975ல் தொடங்கிய கட்டடப் பணி 2006ல் நிறைவாகிறது இக்கட்டடப் பணிக்குழைத்த சங்கத் தலைவர்களுக்கும் தமிழ் ஆர்வலர்களுக்கும் இக்கட்டட அமைப்பிற்கு நிதி நல்கிய பெரியோர்களுக்கும் தமிழுலகு பெரிதும் கடமைப் பட்டுள்ளது. இப்பணி நிலைபெற உதவிய திருவருளைப் போற்றுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நூலகம் ஒன்று தலை நிமிர்ந்து வளர்கிறது

## கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகக் கட்டட விரிவாக்கத்தினைபொட்டி வெளியிடப்பெறும் சிறப்பிதழுக்கான ஒரு குறிப்பு.

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி
காப்பாளர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகம் அதன் வளர்ச்சி வரலாற்றில் மேலும் ஒரு முக்கிய கட்டத்தை எய்துகிறது.

தமிழ், தமிழியல் சார்ந்த நூல்களையே தனது பிரதான கருவூலமாகக் கொண்டியங்கும், கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகம் இலங்கையின் சங்க நிறுவனமொன்றின் நூலகம் எனும் வகையில் அதுவும் தமிழ்ச் சங்கமொன்றின், தமிழ் சார்ந்த நூலகமெனும் வகையில் இது இன்று எட்டியுள்ள சீர்மையினையும், செழுமையினையும் வேறெந்த சங்க நிறுவன நிலைபட்ட நூலகமும் பெறவில்லையெனலாம். இதன் வளர்ச்சியில் குறிப்பாக அதன் நூல் வளங்களைப் பொறுத்தவரையில் இரண்டு முக்கிய கட்டங்களைத் தாண்டியுள்ளது என்பது கொழும்புத் தமிழ்ச் சங்கத்தோடு தொடர்புடையவர்களுக்குத் தெரியும். முதற் கட்டம் அதன் உருவாக்கற் கட்டமாகும். கொழும்பின் அரசியற் சூழல் தமிழ் வளர்ச்சிக்கான ஓர் உத்வேகத்தை வழங்கமுடியாதிருந்த நிலையிலும் சங்கத்தின் இருப்பையும் வளர்ச்சியையும் ஏறத்தாழ தனது வாழ்க்கைப் பணியாக்கிக் கொண்ட ஆசிரியர் திரு. இ. க. கந்தசாமி (கந்தசாமி மாஸ்டர்) அவர்கள், காலஞ்சென்ற எம். ஜி. இராமச்சந்திரன் தமிழக முதல்வராக இருந்த பொழுது, அவரிடத்துச் சென்று அப்போது மிகச் சிறிய அளவிலிருந்த சங்கத் தமிழ் நூலகத்தை வளப்படுத்த உதவுமாறு அவரைக் கேட்டார். எம். ஜீ. ஆர். தமிழக அரசுடன் சம்பந்தப்பட்ட சகல வெளியீட்டு நிறுவனங்களினதும் பிரசுரங்களை வெகுமதியாக வழங்கினார்.

ஏற்கனவே வித்வான் வ.மு. கனகசுந்தரம் காலத்தில் மிகச் சிறிய அளவில் சேர்த்து வைக்கப்பட்டிருந்த தமிழ் நூல்களுடன் இந்த இறக்குமதிகள் சேர்ந்து கொண்டதும் வரன்முறையான நூலகமொன்று உருவாக்கப்பட்டதெனலாம்.

திரு, கந்தசுவாமி அவர்களுடன் நீண்ட காலத் தொடர்புடையவன் எனும் வகையில் அந்த நூற் சேகரத்தை அவர் எத்துணைக் கடப்பாட்டுணர்வுடன் பேணி வந்தாரென்பது எனக்குத் தெரியும். அப்பொழுது. அந்த நூல்களின் பெரும்பாலானவை உசாத்துணை நூல்களாகவே பயன்படுத்தப்பட்டன. கொழும்புத் தமிழ்ச் சங்கத்துக்கான புதிய கட்டடத் தொகுதி வருவதற்கு முன்னர் தமிழ்ச் சங்கத்தின் மூன்றாவது மாடியில் இந்த நூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக முக்கியமான நூல்களைக் கொண்டிருந்தது. ஏறத்தாழ 1990 களின் இறுதிப் பகுதியில், கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் மொழி நிலை பண்பாட்டு முக்கியத்துவம், தென் கொழும்பின் தமிழ் பேசும் மக்களால் குறிப்பாக, இளம் தலைமுறையினரால் பெரிதும் உணரப்படத் தொடங்கிற்று. 1990களில் பெரும் பகுதியில் கந்தசாமி ஆசிரியர் சங்கத்தின் அகநிலை அமைப்புக்களைப் பலப்படுத்தச் சில வருடங்கள் தலைவராக விளங்கிய செ. குணரத்தினம் தமிழ் நிலைப்பட்ட ஒரு மக்கட் கவனிப்பினைச் சங்கத்தின் பால் ஈர்ந்தார் எனலாம்.

1983 க்கு பின்னர் கொழும்பில் தமிழ் நிலைப்பட்ட பண்பாட்டு நடவடிக்கைகளுக்குக் குறிப்பாக மொழி சார்ந்த நடவடிக்கைகளுக்குக் கொழும்பு தெற்கில் இடமில்லாதிருந்தது. இதனைத் தொடர்ந்து வந்த வருடங்களில் கொழும்பு தெற்கின் தமிழார்வ இளைஞர்களுக்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கமே ஒருமைய நிறுவனமாக மேற்கிளம்பத் தொடங்கிற்று.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தைப் பொறுத்தவரையில் இது மிகவும் வாய்ப்பான ஒரு காலகட்டமாக அமைந்தது. தமிழ் பேசும் இளந் தலைமுறையினர் இச்சங்கத்தினைத் தங்களுக்கான ஒரு கருத்தாடல் மையமாகக் கொண்ட அதே வேளையிலே தான், கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. சங்கரப்பிள்ளை அவர்களின் நினைவாக அவரது குடும்பத்தினர் தமிழச் சங்கக்கட்டட விஸ்தரிப்புக்கான நிதியுதவியினை வழங்கினர்.

இத்தகைய ஒரு பின்புலத்திலே தமிழ்ச் சங்க நூலகப் பொறுப்பாளராக திரு. கணேசலிங்கம் குமரன் தேர்ந்தெடுக்கப் பெற்றார். குமரன் நூலகப் பொறுப்பாளராக இருந்தக் காலத்தில் அதன் இன்றைய விஸ்தரிப்புக்கான கட்டுமான அபிவிருத்திகள் பற்றிய செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். நூல் வெளியீட்டாளர், சந்தைப் படுத்துநர் எனும் தனது தொழில் முறை ஈடுபாடுகள் காரணமாக ஒரு நூலகத்தினைச் சமகால வளர்ச்சிகளுக்கேற்ப நடத்துவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். ஒரு புறத்தில் நூலக வள விஸ்தரிப்புக்கும், இன்னொரு புறத்தில் நூலகத்தின் இயங்குநிலைச் செயற்பாடுகளுக்கான அகக் கட்டுமான வளர்ச்சிக்கும் வேண்டியனவற்றைச் செய்தார். இவ்விடயங்களில், யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் ஓய்வுபெற்ற நூலகரான திரு. சி. முருகவேளின் நிபுணத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டார்.

திரு. குமரனுடைய செயற்பாடு காரணமாகக் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகம் தன்னிடத்திருந்த வளங்களைப் பரவலான அறிவுப் பகிர்வு செய்வதற்கான ஒரு மையமாக தாபிதம் பெற்றது. இலங்கைத் தமிழ்ப் பிரசுரங்களுக்கென ஒரு பிரதான மையமாக இந்நூலகத்தை வளர்த்தெடுப்பதற்கு வேண்டிய பணியினையும் மேற்கொண்டிருந்தார். இப்பொழுது இந்நூலகத்தின் பொறுப்பாளராகக் கல்வித்துறை சார்ந்த திரு. தி. கணேசராஜா தெரிந்தெடுக்கப் பெற்றுள்ளார். இவர் புகழ்மிக்க ஒரு பாடசாலை அதிபராவார். இவருடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிநடத்துகை இந்த நூலகத்தை மேலும் சில முக்கிய கட்டங்களுக்கு வளர்த்தெடுத்துச் செல்லும் என்ற துணிவு நமக்குண்டு. கல்வி நிலை வாசிப்பு பரவலுக்கும் அறிவு நிலைத் தேடல்களுக்கும் குறிப்பாக வாசகர் நிலை பிரஞ்ஞை வளர்ச்சிக்கும் இவர் பணிகள் பெரிதும் உதவும். இக்கட்டத்தில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினது நூலகம் இலங்கை மட்டத்தில் பெறும் முக்கியத்துவம் பற்றியும், மேலும் அது தமிழ் நூலக அபிவிருத்தித் துறையில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் சில பற்றியும் ஒரு சிறிது மிகச் சுருக்கமாக கூறவிரும்புகிறேன்.

பல்கலைக்கழகமட்ட நூலகங்களை எடுத்துக்கொண்டால் பேராதனை, யாழ்ப்பாணம், கிழக்கிலங்கை, தென்கிழக்கு பல்கலைக்கழகங்களே எமது கவனத்தை ஈர்க்க வேண்டியவையாகின்றன. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தமிழ், தமிழியற் பிரிவு என்ற ஒன்றில்லை. பேராதனைப் பல்கலைக்கழகம் ஏறத்தாழ 1980 வரை தமிழ், தமிழியல் துறைகளில் பெற்றிருந்த வளத்தினை 1990 களில் இழந்து விட்டது. என்றே கூற வேண்டும் இப்பொழுது மீண்டும் தமிழ் நிலைச் செயற்பாடுகள் மீளத்துளிர்க்கத் தொடங்கியுள்ளதென அறிகின்றோம். ஆனால், ஏறத்தாழ இரு பத்தாண்டுக் காலச்சிதைவு அதன் தமிழ் வளங்களைப் பாரதூரமாகப் பாதித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் அதிஷ்டவசமாக மிகச் செழுமையானதொரு தமிழியல் நூலக மையமாக மலர்ந்துள்ளது. அதன் இன்றைய செழுமையினை அது ஈட்ட உதவியவர்களுள் ஆர். எஸ். தம்பையா, சி. முருகவேள் ஆகிய நூலகர்களின் பணி மிக முக்கியமானதாகும்.

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் அதன் தமிழ் - தமிழியல் வளத்தைப் பொறுத்தவரையில் வளர்ந்து கொண்டிருக்கும் நிலையிலேயே உள்ளது. எப். எக்ஸ். ஈ. நடராசா, சில்லையூர் செல்வராசன் போன்றோரது தனிப்பட்ட நூற் சேகரங்களை அதுபெற்றுள்ளதெனினும் கிழக்கிலங்கையின் தமிழ் வளம் பற்றிய தனித்துறையை வளர்க்க வேண்டியுள்ளது. தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகம் வளர்நிலையிலேயுள்ளது.

இவற்றைவிடப் பொது நூலகங்கள் என விளங்கும் பெருநகர் பொது நூலகங்களை எடுத்து நோக்கும் பொழுது யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு ஒரு முக்கிய இடமுண்டு. 1981 இல் எரிக்கப்பட்ட அந்நூலகம் அதன் முந்திய வளங்களையிழந்து ஆனால் புதிய வளங்கள் பலவற்றைப் பெற்றுள்ளது. மட்டக்களப்பு பொது நூலகம் மிகச் செழுமையானது வளம்மிக்கது உண்மையில் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்திலும் பார்க்கத் தமிழ் நூல் வளம் செழுமையானது என்றே கூறவேண்டும். திருமலை, மன்னார் ஆகிய நகரங்களிலும் நல்ல பொதுநூலகங்கள் உண்டெனினும் அவற்றில் தமிழ் நிலைப்பட்ட, திட்டமிடப்பட்ட பெருவளர்ச்சிகள் ஏற்படவில்லையெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பின்புலத்திலே நோக்கும் பொழுதுதான் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தின் வளமும், ஒழுங்கமைப்புச் செழுமையும் முக்கியப்படுகின்றன. சென்னையிலிருந்து வரும் சில புலமையாளர்கள் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தின் சிறப்பை விதந்து கூறுகின்றனர். இன்றுள்ள நிலையில் இலங்கையில், பல்கலைக்கழகங்களுக்கு வெளியேயுள்ள தமிழ் நூலகங்களுள் மிக முக்கியமானது. கொழுபுத் தமிழ்ச் சங்க நூலகமாகும்.

கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்துக்கு மூன்று நிலைப்பட்ட பெரும் பணிகள் உள்ளன. முதலாவது கொழும்பிலுள்ள தமிழ், முஸ்லிம் மாணவர்கள் தமிழ் வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்தலும், அவர் தம் வாசிப்பு பழக்கப் பேணுகைக்கு உதவுவதுமாகும். இரண்டாவது குறிப்பாக தென் கொழும்புப் பகுதியில் வசிக்கும் பொதுவான தமிழ் வாசகர்களின் வாசிப்பு பழக்க பேணுகைக்கும், விருத்திக்கும் உதவுவதாகும் இது ஒரு மிக முக்கியமான பணி. குறிப்பாக பெண் வாசகர்களிடையே தான் ஜனரஞ்சக வாசிப்புக்கான தளம் உள்ளதாகக் கூறுவார்கள். இந்த விடயத்திலே போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பிரதான நிகழ்ச்சிகளுள் ஒன்றாக அமையும் அறிவோர்கூடல் போன்று நூலக வாசகர்களை மையமாகக் கொண்ட நிகழ்ச்சிகள் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும். மூன்றாவது இந்நூலகம் இருநிலைப்பட்ட சிறப்பு வளர்ச்சியைப் பெறல் வேண்டும். ஒன்று இலங்கை நிலைப்பட்ட தமிழ் வெளியீடுகள் யாவற்றையும் இங்கு பேணிப் பாதுகாத்தல் இதற்கான முயற்சிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. என்பது நமக்குத் தெரிந்ததே. இவ்விடயத்தில் கொழும்பு தவிர்ந்த மற்றய இடங்களிலுள்ள தமிழ்சார் பிரசுரங்களைப் பற்றி அறிவதற்கும் அவற்றைப் பெறுவதற்குமான ஓர் அமைப்பொழுங்கு உண்டாக்கப் பெறுவது பலன் தரும். மற்றது தமிழ், தமிழியல் பற்றிய சமகால அபிவிருத்திகளைக் காட்டும் பிரசுரசேகரிப்பு முறைமையினை மேற்கொள்ளல் அவசியம். தமிழகம், மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் பற்றி ஒரு முறைமையிலும், புலம்பெயர் நாடுகள் பற்றி இன்னொரு முறைமையிலும் யாவற்றுக்கும் மேலாகத் தமிழியல் வளர்ச்சிகளை உலகநிலை தமிழியல் வளர்ச்சிகளை வழங்குவதற்கு வேண்டிய வளங்களையும், வாய்ப்புக்களையும் அமைத்துக் கொள்ளல் வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகம் உலகத் தமிழர் நிலைப்பட்ட ஒரு தகவல் பரிமாற்ற மையமாக விளங்குதல் வேண்டும். கணனி, இணையத் தொடர்பு மிக வளர்ந்துள்ள இன்றைய நாட்களில் இப்பணி சிரமமுடையதாகாது. சுருக்கமாச் சொன்னால் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகம் தமிழ், தமிழ் பேசும் மக்கள் பற்றிய ஒரு மையமாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்சங்கம்

**கலாநிதி வ.மகேஸ்வரன்**
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்
ஆட்சிக்குழு உறுப்பினர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

I

சங்கம் என்பதற்கு, கூட்டம், சபை, புலவர், பாண்டியர் ஆதரவு பெற்று விளங்கிய தலைச் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என முச்சங்கங்கள், சைன், பௌத்தர்களின் சங்கம் என்று விளக்கம் தருகின்றது தமிழ்ப் பேரகராதி (Tamil Lexilon, Vol III, P 1222) தமிழ்நாட்டில் குறிப்பாகப் பாண்டி நாட்டில் மூன்று சங்கங்கள் இருந்தன என்பது பொதுவாகக் குறிப்பிடப்படுவது இன்று பெருவழக்காயுள்ளது. பாண்டியர் தென் மதுரையிலிருந்து ஆட்சிபுரிந்த காலத்தில் தமிழை வளர்ப்பதற்கு அந்நகரில் நிறுவிய தமிழ்ச்சங்கம், முதற்சங்கம் என்றும் அவர்கள் கபாட புரத்தில் இருந்த காலத்தில் நிறுவிய சங்கம் இடைச்சங்கம் என்றும் இப்பொழுதுள்ள மதுரையில் அவர்கள் இருந்த காலத்தில் நிறுவிய சங்கம் கடைச்சங்கம் என்றும் அழைக்கப்பட்டன. (செல்வநாயகம் வி. 2003 : 4)

இறையனார் எழுதிய களவியல் என்ற நூற்கு உரை செய்தோர்

"*தலைச்சங்கம் இருந்தார் அகத்தியனாரும், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும் குன்றெறிந்த முருகவேளும் முருஞ்சியூர் முடிநாகராசரும் நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐநூற்று நாற்பத்து ஒன்பதின்மர் என்ப*" எனக் குறிப்பிடுகின்றனர் (இறையனார் அகப்பொருள் உரை : 5) இந்த வகையில் கடவுளர் தொடக்கமாக இன்று பேசப்படுகின்ற சங்கப்புலவர் பலர் இச்சங்கங்களில் அங்கத்தவர்களாயிருந்துள்ளனர் என்பது இதனூடாக அறிய முடிகின்றது. இச்சங்கங்கள் நிறுவிய காலங்கள் '' சங்க காலம் எனவும் அக்காலத்துக்குரிய இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் எனவும் அழைக்கப்படுவது தமிழில் இன்று வரை பெருவழக்காக இருந்து வருகின்றது.

மேற்குறித்த கருத்தியலை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது சங்கம் என்பது புலவர் கூட்டு என்பதும் தமிழ்ப்புலமையாளர்கள் ஒன்றிணைந்து, தமிழ் ஆய்ந்தும், நூல் எழுதியும், வாதவிவாதங்கள் புரிந்தும். தமிழ் வளர்த்தனர் என்பது தெரிய வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று சங்கம் என்ற சொல் பல்வேறு பொருளில் வழங்கப்பட்டு வருகின்றபோதும் அது தமிழை அல்லது மொழியை முதன்மைப்படுத்திய அமைப்பையே பெரிதும் குறித்து நிற்கின்றது என்பது வெளிப்படை.

சங்கம், சங்கத்தமிழ் என்ற பதங்கள் பின் நாட்களில் தமிழ்ச் சூழலில் பெரிதும் செல்வாக்குப் பெற்ற பதங்களாக விளங்கின.

''முத்தமிழும் நான்மறையும் உயர் மதிற் கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழ்'' என மாணிக்கவாசகரும்

''சங்கமலி செந்தமிழ்'' எனச் சம்பந்தரும், 'சங்கத் தமிழ் மாலை' என ஆண்டாளும், திரு மங்கையாழ்வாரும், சங்கத்தையும் தமிழ் மொழியையும் இணைத்துச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். இவ்வாறாக அவர்கள் கூறுவதற்கான உள்நோக்கத்தை நுணுகி ஆராயின் சங்கத்துக்கும் தமிழுக்கும் இடையேயான நெருக்கத்தின் கனதித்தன்மையை அறியலாம். (மகேஸ்வரன். வ 1995 : 72) இடைக்காலத்துத் தமிழ்க் கல்வெட்டுகளும் இதற்கு முக்கியத்துவம் அளித்தன. அது சங்கம் என்பதற்குச் சங்கு என்றும், புலவர் கூட்டு என்றும் பொருள் தருகின்றது. எனினும் அது சங்கத்தையும் தமிழையுமே இணைத்து ''தென் மதுராபுரஞ் செய்தும் அங்கதனில் வருந்தமிழ்ச் (நற்) சங்கம் இரீஇத் தமிழ் வளர்த்தும்'' எனக் குறிப்பிடுகின்றது. (தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி : முதல் தொகுதி : 228)

## II

'சங்கம்' என்ற சொல் தமிழ்ச் சொல் அல்ல அது தமிழ் உருவம் பெற்ற சங்கச் சொல் என்றும், தமிழகத்தில் கி. பி. 470 இல் வச்சிரநந்தி என்ற சமண முனிவர் திராவிட சங்கம் என்ற அமைப்பொன்றை உருவாக்கிய பின்னரே 'சங்கம்' என்ற சொல் தமிழில் பெருவழக்காயிற்று என்றும் இத்திராவிட சங்கத்தைப் பின்பற்றியே தமிழ்ச் சங்கம் சமயச்சார்பான ஒரு கழகமாக முதலில் நிறுவப்பட்டது என்றும் சிலர் குறிப்பிடுகின்றனர். தமிழ் மொழி சங்கதம் முதலான பிறமொழிகளில் இருந்து மட்டுமல்ல. இந்தியப்பண்பாட்டுக் கூறுகள் பலவற்றைத் தன்னுள் வாங்கிக் கொண்டது. எனவே சங்கத மொழிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லொன்றைத் தமிழில் ஏற்றுக்கொண்டு அதே கருத்தியலுக்கு அமைய அச்சொல்லை அர்த்தமுள்ளதாக வளர்த்தெடுத்ததில் தவறு ஏதுமில்லை.

வச்சிர நந்தியின் ''திராவிட சங்கம்' தான் தமிழில் சங்கம் என்ற கருத்தியலை வளர்க்கக் காரணமானது என்பதும் தவறான வாதமாகும். ஏனெனில் பண்டைய தமிழ் நாட்டில் புலவர் அவை அல்லது கற்றறிந்தோர் அவை என்பது நிலவியே வந்துள்ளது.

1. சமண பௌத்த சங்கங்களைப் போல நூல்களை ஆக்குவதிலும் படிப்பதிலும் ஈடுபட்டிருந்த சமயச்சார்பான குழு அல்லது சங்கம்.

2. இலக்கிய ஆர்வமுள்ள அரசன் ஒருவன் தன்னுடைய கவிதைகளையும், தன்னைச் சுற்றியுள்ள பெருமக்களின் கவிதைகளையும் கேட்டு மகிழ்ந்த கழகங்கள்

3. ஒரு பெரும் புலவனைத் தலைவனாகவும் அவனைப் பின்பற்றும் புலவரை உறுப்பினராகவும் கொண்ட கழகங்கள்

4. ஒரு தன்மைத்தான பண்புகளையுடைய இலக்கியங்கள் எழுந்த காலப்பகுதி

என இவற்றை அறிஞர் பாகுபடுத்தினர்

(வித்தியானந்தன் சு. 1971 : 16 - 17)

இவற்றுள் முதலாவது வகைக்கு மணிமேகலையில் துயில் எழுப்பிய கதையில் வரும் 'புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்க' என்ற எடுத்துக்காட்டையும். இரண்டாவது வகைக்குத் தலையாலங்கானத்துக் செருவென்ற நெடுஞ்செழியன் பாடியதாகக் குறிப்பிடும் புறநானூறு 72 பாடலையும். (மாங்குடி மருதன் றலைவனாக உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற் புலவர்) இதனையே மூன்றாம் வகைக்கும் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். புலவர் பலர் பொதுவான இயல்புகளையுடைய பாடல்கள் பாடினர் என்றால் அவர்களுள் ஒருவிதமான இணைவு இருந்திருக்க வேண்டும் எனவே 'சங்கச் செய்யுட்களின் பொதுமைப் பண்பு, நான்காவது வகைக்கும் எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம் என்பர். (வித்தியானந்தன் சு. 1971 : 18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் என்ற பெயரில் அல்லாது அதனது நோப்பொருளைக் குறிக்கும் தொகை, கூடல், அவை, புணர் முதலிய தூய தமிழ்ச் சொற்கள் சங்க நூல்களில் பயின்று வந்துள்ளனவென்பதும் குறிப்பிடக்கூடிய விடயமாகும். எது எவ்வாறெனினும் சங்கம் என்ற சொல் தமிழை வளர்க்கும் அவையையே காலந்தோறும் குறித்து வந்தது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## III

மேற்குறித்த கருத்தியல் தொடர்ந்தும் தமிழர் மத்தியில் நிலைபேறாக்கம் பெற்று வந்துள்ளது என்பதற்கு இன்று வரை நிலை பெற்றுள்ள தமிழ்ச்சங்கங்கள் வழி அறியலாம். மதுரையில் பாண்டித்துரைத் தேவர் நிறுவிய தமிழ்ச் சங்கம் நான்காம் தமிழ்ச் சங்கம் என்றும், எண்பதுகளின் முன்கூறில் முன்னாள் தமிழக முதல்வர் அமரர் எம். ஜி. இராமச் சந்திரனால் நிறுவப்பட்ட தமிழ்ச் சங்கம் ஐந்தாம் தமிழ்ச் சங்கம் என்றும் குறிப்பிடப்படுகின்றது. இச்சங்கம் தமிழக அரசின் ஆதரவுடன் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மேற்பார்வையுடன் நடைபெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றைவிட இந்திய நாட்டின் பல தலைநகரங்களில் வாழும் தமிழர்கள் தமது மொழி மூலமான இணைவை வெளிப்படுத்தவும், தமிழ்ச் சங்கங்களை அமைத்துத் திறம்படச் செயற்படுத்தி வருகின்றனர். தில்லித் தமிழ்ச் சங்கம், பம்பாய்த் தமிழ்ச்சங்கம் ஆகியவை இவ்வகையில் குறிப்பிடக்கூடியன. இன்று உலகளாவிய ரீதியில் தமிழ்ச்சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. அல்லது இயங்குகின்றன. அவற்றின் அடிப்படை நோக்கம் பண்பாட்டுப் பேணுகையே. மொழிவழி வளர்ந்த இனத்துவ அடையாளங்கள் பலவற்றைப் பேணுதலே இவற்றின் இன்றைய நோக்கங்களாக விளங்குகின்றன.

இலங்கையில் மொழிவழிச் சங்கங்கள் இயங்கி வந்துள்ளன. இவ்வகையில் யாழ்ப்பாணத்தில் இயங்கிய ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் நோக்கங்களும் செயற்பாடுகளும் மனங்கொள்ளத் தக்கவை. இலங்கையில் பல்கலைக் கழகக் கல்லூரி உருவான காலத்திலே தமிழ்ச் சங்கங்கள் உருவாக்கப்பட்டது. இன்று யாழ்ப்பாணம், கொழும்பு, கிழக்கு, தென்கிழக்குப் பல்கலைக் கழகங்களில் தமிழ்ச் சங்கங்கள் இயங்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச்சங்கமே அனைத்து தமிழ்ச் சங்கங்களுக்கும் தாய்ச்சங்கமாக விளங்குகின்றது. வைரவிழாக்கண்ட சிறப்பு அதற்குண்டு. இவ்வாறான அருட்டுணர்வில் பாடசாலைகளிலும் தமிழ்ச்சங்கங்கள் உருவாகின என்பதையும் குறிப்பிடவேண்டும்.

கொழும்பு நகரில் நீண்டகாலம் நிலைபெற்று வருவது கொழும்புத் தமிழ்ச்சங்கம் தமிழ் மொழிப் பேணுகை, தமிழகப் பண்பாட்டுப் பேணுகை என்ற விடயங்களில் மிகவும் அக்கறையுடன் இது செயற்பட்டு வருகின்றது. இதன் உயிர் நாடியாக விளங்குவது இதன் நூலகமாகும். அரிய பல தமிழ் நூல்கள் இந்நூலகத்தில் உள்ளமை ஆய்வாளருக்கும், தமிழ் ஆர்வலருக்கும் உவப்பளிக்கும் விடயங்களாகும். தனக்கென நான்குமாடிகள் கொண்ட கட்டடத் தொகுதிகள், மாநாட்டு மண்டபங்கள், கருத்தரங்க அறைகள், வாசகசாலை, நூல் பதிப்பும் வெளியீடும் விற்பனையும், கல்விக் கூடம், தங்குமிடம் என உள்ளக அமைப்புகளையும், அறிவோர் கூடல் தொடங்கி சான்றோர் நினைவு வரையிலான தொடர் இலக்கிய நிகழ்ச்சிகள், நூல் வெளியீடுகள், சஞ்சிகை வெளியீடு, ஆன்றோர் கௌரவம் எனத் தமிழ்ப்பணிகளையும் இது ஆற்றிவருகிறது. உண்மையில் 'தமிழ்ச் சங்கம்' என்ற கருத்தியலின் நடைமுறை உதாரணமாக விளங்கும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் பணிகள் மேலும் வேகங்கொள்ள கல்வியாளரும் புலவோரும், சான்றோரும், தமிழ் அபிமானிகளும் ஒன்று கூடுவோமாக.

**உதவியவை :**


1. வித்தியானந்தன் சு. (1985 மூன்றாம்பதிப்பு) தமிழர் சால்பு
   பாரி புத்தகப் பண்ணை, சென்னை
2. செல்வநாயகம். வி. (1965 நான்காம் பதிப்பு) குமரன் புத்தக இல்லம், சென்னை
3. தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி (2002) சாந்தி சாதனா, சென்னை
4. Tamil Lexicon, Vol II Part I (1982) Madras,
5. மகேஸ்வரன். வ. (1995) பக்தி இயக்கமும் தமிழும், இந்து தருமம், பேராதனை.
6. இறையனார் அகப்பொருள் உரை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் துளசி இராமசாமியின் தமிழக கலைச் செல்வங்கள் என்ற நூலில் டாக்டர் க.த. திருநாவுக்கரசு எழுதிய கட்டுரையிலிருந்து ஒரு பகுதி

# கட்டடக்கலை

## கட்டடக்கலை: அறிமுகம்:

கவின் கலைகளுள் ஒன்றாகக் கட்டடக்கலை போற்றப்படுகிறது. இந்தியக் கலை மரபினுள், சிற்பக்கலை எனும் பெயராலேயே, கல்லினால் செய்யப்படும் செதுக்குச் சிற்பங்களையும் (Sculpture) பெருமிதத் தோற்றமுடைய கட்டடங்களையும் (Architecture) சுட்டுவது வழக்கம். இவ்வாய்வில், கட்டடக்கலை எனும் சொல், Architecture எனும் ஆங்கிலச் சொல்லிற்கு நேரான தமிழ்ச்சொல்லாகப் பயன்படுத்தப்படுகின்றது.

## கட்டடமா? கட்டிடமா?

தமிழில் கட்டடம் எனும் சொல், கட்டுமான வடிவத்தைக் (Building) குறிப்பதாகும். கட்டு, இடம் எனும் இரு சொற்களும் சேர்ந்து அமைகின்ற கட்டிடம் எனும் சொல் ஒரு கட்டுமான பருப்பொருளுக்கு நிலைக்களமாக உள்ள இடத்தைச் (மனையை) சுட்டுவதாகும். அடம் எனும் தொழிற்பெயர் விகுதி, அடுக்கு அடுக்காக அமைக்கப்பெறும் கட்டுமான வடிவம் எனும் பொருளைத் தருவதாகும். எனவே, கட்டடம் எனும் சொல்லே நாம் கருதும் பொருளில் அமைவதாகும்.

அழகுக் கலைகளுள், மூவகை அளவைக் கூறுகளைக் கொண்டது கட்டடக்கலை, நீளம், அகலம், பருமன் ஆகிய மூன்று பரிமாணங்களால் காண்பவர் கண்ணையும் கருத்தையும் கவருவது கட்டடக்கலை, கல், மண், மரம், உலோகம் முதலியவற்றால் அமைக்கப்படுவது கட்டடக்கலை.

## கட்டடக்கலையின் சிறப்பு

கட்டடக்கலை சிற்பம், ஓவியம் ஆகியவைகளுக்கு அடிப்படையானது. இது தொழில்நுட்பம், அழகு, கற்பனை ஆகிய மூன்றும் இணைந்த ஒப்பற்ற கலையாகும். இக்கலைக்கு விளக்கம் கூறுவது எளிதன்று: கட்டடக்கலை என்பது வெறும் கட்டடத்தினும் உயர்ந்தது. கட்டடம், கட்டடக் கலையாக இருக்க வேண்டுமானால், இது காண்பவரின் கற்பனையைத் தூண்டக் கூடியதாக அமைய வேண்டும். கற்பனை பல வகையாகத் தூண்டப் பெறலாம், வரலாற்றுத் தொடர்பால், சில கட்டடங்கள் கற்பனையைக் கவரக்கூடும் (விவேகாநந்தர் மாளிகை - பாரதியின் வீடு - தாஜ்மகால் முதலியன) இவ்வாறு, கற்பனையைத் தூண்டக் கூடிய கட்டடங்களையெல்லாம், கட்டடக் கலைப் பண்புடையவை எனச் சொல்ல முடியாது. கவர்ச்சியானது. அழகு பற்றியதாக இருக்க வேண்டும், அழகு என்பது இவ்விடத்தில், சிறப்பாகக் கற்பனையைத் தூண்டும் திறமையைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்லீகல் (Schlegal) என்னும் ஜெர்மானிய அறிஞர் கட்டடக் கலையை உறைந்துபோன இசைக்கலை (Architecture is the frozen music) என்பர். இதனால், இசையின் இயல்புகள் அனைத்தும், பருப்பொருளின் மூலம் வெளிப்படுவதே கட்டடக்கலை என்பது போதரும்.

மனித இனப் பண்பாட்டின், வேறு எந்தத் துறைகளிலும் மனிதனுடைய முன்னேற்றமிகு வளர்ச்சியை அல்லது நலிவுமிகு சீரழிவைக் கட்டடக்கலையைப் போன்று, மிகச் துல்லியமாகப் பிரதிபலிக்கக் கூடிய ஒன்றைக் காண இயலாது. ஆதிகாலம் முதற் கொண்டு. கட்டடக்கலை அடைந்துள்ள வளர்ச்சியிலிருந்து - சிறு குடிசையிலிருந்து வியத்தகு கோயில்களும் அரண்மனைகளும் கட்டப்பட்ட காலம் வரையில் - தன்னுடைய சமூக சமயச் சூழல்களையும் வாழ்க்கை நோக்கத்தையும் வெளிப்படுத்துவதற்கு மனிதன் ஓயாமல் அரும்பெரும் முயற்சிகள் செய்து வந்துள்ளான். மேலும், மனிதன் அழகுணர்வோடு பயன்பாட்டையும் அவற்றோடு பிணைத்துப் போற்றி வந்துள்ளான். அவற்றின் அழகில் அவனுடைய சுவையுணர்வின் நோக்கையும் போக்கையும் நாம் புரிந்து கொள்ள முடிகிறது. தமிழகத்தின் கட்டடக்கலையில், இப்பண்புகள் மிகத் தெளிவாகப் புலனாகின்றன.

**கட்டடக்கலையின் இயல்புகள்**

மூவகை இயல்புகளை உடையது கட்டடக்கலை, முதலாவது இயல்பு, பயன்பாடு: இரண்டாவது இயல்பு நிலைபேற்றுத் தன்மை: மூன்றாவது இயல்பு அழகு, இம்மூன்று இயல்புகளும், இணைந்து இயங்குகின்ற பொழுது ஒருவகை இணக்கமும், எழிலும் தாமாகவே தோன்றுகின்றன. பண்டைக்காலத்தில் கட்டடக் கலைஞர்கள் தோற்றத்தில் எளிமை, வலிமை, பயன், வசதி ஆகிய இந்த நான்கையும் அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு கட்டடங்களைக் கட்டினர்.

**கட்டடக் கலைக்குரிய உந்துதல் சக்தி**

கட்டடக் கலையின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் உந்துதல் சக்தியாக அமைந்தது சமய உணர்வு என்பர்.

கடவுள் வழிபாட்டிற்காகக் கோயில் கட்ட வேண்டும் என்ற ஆர்வமே எல்லாரும் வியந்து போற்றும் கட்டடங்கள் தோன்றுவதற்குத் தூண்டுகோலாயிற்று, கடவுள், கோயில், கொள்ளுவதற்குப் பிற கட்டடங்களைக் காட்டினும் மிகச் சிறந்த கட்டடத்தை. உருவாக்க வேண்டும். என்னும் உந்துதல் சக்தியே கலை வளர்ச்சிக்குத் தலையூற்றாய் அமைந்தது. அவ்வுயர்ந்த நோக்கத்தின் தூண்டுதலால், அழகியவை என்றும், உயர்ந்தவை என்றும் உலக மக்கள் கருதக்கூடிய பண்புகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து, ஒப்பற்ற கட்டடக்கலையினைப் பல்வேறு நாட்டு மக்கள் உருவாக்கியுள்ளனர். என்பது பெர்குசன் (Fergusson) எனும் அறிஞரின் கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால்தான், எல்லா நாடுகளிலும், கோயில்கள் மற்றக் கட்டடங்களை எல்லாம்விடச் சிறப்பும் மேன்மையும் மிக்கனவாக உள்ளன. சமயத்திற்கு அடுத்த நிலையில் காதல், கட்டடக்கலை வளர்ச்சிக்கு ஓர் உந்துதல் சக்தியாக அமைந்தது எனலாம். காதலால் கனிந்தெழுந்த கட்டடத்திற்குத் தாஜ்மகாலை எடுத்துக்காட்டாகக் கூறுவர்.

இந்தியர் ஆன்மிகக் கொள்கையினர். மனித வாழ்க்கையின் நிலையாமையை நன்கு உணர்ந்தவர். ஆகவே, நிலையற்ற வாழ்க்கைக்கு நிரந்தரக் கட்டடங்களை அமைப்பதில் நாட்டம் செலுத்தாமல், உலகம் அழியினும் தான் அழியாது தனித்து நிற்கும் ''எல்லையற்ற பரம்பொருளை'' வழிபடுவதற்கு, நிலையான அழகிய கோயில்களைக் கட்டினர். கோயில்களில் காணப்படும் வானளாவிய கோபுரங்கள் இந்தியரின் உயர்ந்த நோக்கத்தின் சின்னமாகத் திகழ்கின்றன. என்பது டாக்டர் ஆனந்த குமாரசாமி அவர்களின் கருத்தாகும்.

## இந்தியக் கட்டடக்கலையின் தொன்மைச் சின்னங்கள்.

தமிழகக் கட்டடக்கலை, தமிழகத்திற்கே உரியது. தொல் பழங்காலம் முதற்கொண்டே, தமிழர் கட்டடக்கலையைப் பேணி, வளர்த்து வந்துள்ளனர். பண்டை இந்திய நாகரிகத்தின் மேன்மைக்குச் சிறந்த சான்றுகளாகத் தமிழரின் மூதாதையர்களான திராவிடப் பழங்குடி மக்கள் கட்டிப் போற்றிய, நாடு நகர அமைப்புகள், சிந்துவெளியில் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்வதைக் காணுகின்றோம். கி.மு.3000 அளவிலே, அமைக்கப்பட்ட மொகஞ்சதாரோ, ஹரப்பா நகரங்களின் கட்டடங்களும், மாளிகைகளும், மண்டபங்களும், தெப்பக்குளங்களும் தென்னாட்டுத் திராவிடக் கட்டடக்கலை முறையின் முன்னோடிகளாகும் என்பது சர் ஜான் மார்ஷல், ஈராசுப் பாதிரியார் முதலிய அறிஞர்களின் கருத்தாகும்.

## தமிழகத்தில் கட்டடக்கலையின் தொல்பழங்காலச் சின்னங்கள்

தமிழ்நாட்டில், புதிய கற்கருவிக் காலத்திலேயே, மனிதன் வீடுகளைக் கட்ட முயன்றான் என்பதனைத் தொல்லியல் ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. வடஆர்க்காடு மாவட்டத்தில் பையம்பள்ளி எனும் இடத்தில், நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் இதனைப் புலப்படுத்துகின்றன.

கி.மு. 1500 முதல் தமிழ்நாட்டில் எழுப்பப்பட்ட பெருங்கற்படை (Magalithic) பிணக்குழிகள், குரக்குப்படை வீடுகள், கல்லறைகள், நடுகல் வழிபாட்டு அமைப்புகள் முதலியன, தொடக்க காலத்திய கருங்கற் கட்டட அமைப்பு முறைகளை அறிவிக்கின்றன. கட்டடத்தின் மையப் பகுதியில் ஒிரு அறைகளைக் கொண்ட சிறு மண்டபம் அமைந்திருக்கின்றது. அதைச் சுற்றி நான்கு புறமும் தாழ்வாரம் போன்ற அமைப்பு காணப்படுகிறது. அந்த கட்டடத்திற்குக் கிழக்குப் புறமாக அல்லது தெற்குப் புறமாக உள்ளே நுழையும் வாயில் அமைக்கப்பட்டிருக்கிறது.இந்தக் கட்டட அமைப்பு, தமிழ்நாட்டில் காணப்படும் மிகத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மையான கட்டடக் கலை மரபின் வடிவமாகும். இதனை, இன்றும் அமிர்தமங்கலம், குன்றத்தூர், அன்னவாசல், ஆதிச்ச நல்லூர், கொற்கை, அரிக்கமேடு, காரைக்காடு, காவிரிப் பூம்பட்டினம், கீழையூர், வாணகிரி, மணிக்கிராமம், பல்லவனீச்சுரம், மேலையூர், சாயாவனம் எனும் இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள அகழ்வாராய்ச்சிகளால் அறிகிறோம்.

## சங்ககாலக் கட்டடக்கலை

தொல்காப்பியத்தால் அறியப்படும் கட்டடக்கலைக் கூறுகள், மிகச் சிலவாகும். பண்டைய தமிழக வேந்தர்களுடைய அரண்மனைகளைச் சுற்றி, வலிமைமிக்க அரண்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதனை முழு முதல் அரண் என்பர் தொல்காப்பியனார். "முழு அரணாவது, மலையும், நாடும் நீரும் அல்லாது அகநாட்டுச் செய்த அருமதில். அது வஞ்சனை பலவும் வாய்த்து. தோட்டி முள் முதலியன பதித்த காவல் காடு புறஞ் சூழ்ந்து அதனுள்ளே முதலை முதலியன உள்ளுடைத்தாகிய அகழி புறஞ்சூழ்ந்து யவனர் இயற்றிய பல பொறிகளும், ஏனைய பொறிகளும் பதனமும் ஏப்புழை ஞாயிலும் ஏனைய பிறவும் அமைந்து, எழுவுஞ் சீப்பும் (எழுப்பிடும் தாழ்ப்பாள்) முதலியவற்றால் வழுவின்றி அமைந்த வாயில் கோபுரமும், பிற இயந்திரங்களும் பொருந்த இயற்றப்பட்டதாகும்" என்று நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளமையால், அக்காலத்து அரண்களை அமைப்பதில் வல்ல கற்கொல்லர் இருந்திருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது.

மதிலை, "ஆரெயில்" "மதிற்குடுமி" முதலிய அடைமொழி தந்து தொல்காப்பியனார் சிறப்பிப்பதால், அக்காலத்தில் கட்டடக் கலைசிறந்திருந்ததை அறிகிறோம்.

போரில் வெஞ்சமர் புரிந்து, விழுப்புண்பட்டு, இறந்த வீரர்களுக்கு வழிபாடு செய்ய ஒரு கல்லைத் தேர்ந்தெடுத்து, அதில் மறைந்த மாவீரனின் உருவத்தைச் செதுக்குவர், அதற்கு அடியில் அவ்வீரனது அரிய செயல்களையும் புகழையும் பெயரையும் பொறித்து வழிபாடு செய்வர். இதனை நடுகல் வழிபாடு என்பது மரபு. இந்நடுகல், வழிபாடே, பிற்காலக் கோயில் வழிபாட்டிற்கும், கட்டடக்கலையின் வளர்ச்சிக்கும் கரு முதலாக அமைந்தன எனக்கூறின் அது மிகையாகாது.

## சங்கப்பாடல்களால் அறியப்பெறும் கட்டடக்கலை மரபு

சங்ககாலத்தில் அரசரின் மாளிகைகளும், கோயில்களும், மண்டபங்களும் இக்காலத்தைப் போலவே, சிற்ப நூலறிந்த புலவர்களால் நாள் குறித்து நாழிகை பார்த்து, நேரறி கயிறிட்டுத் திசைகளையும் அத்திசைகளில் நிற்கும் தெய்வங்களையம் நோக்கி வகுக்கப்பட்டன. இதனை,

ஒரு திறஞ்சாரா வரைநா ளமையத்து
நூலறிபுலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும் பெயர் மன்னர்க்கொப்ப மனைவகுத்து

(நெடுநல், 75 - 78)

எனும் நெடுநல் வாடை அடிகளால் அறிகிறோம்.

அரசருடைய மாளிகைகள் சுற்றுமதில், உயர்ந்த வாயில்கள், அவ்வாயில்களின் மேல் உயர்ந்த கோபுரங்கள் அமைக்கப்பட்டும். வண்ணம் தீட்டப்பட்டும் இருந்தன. இதனை.

விண்ணுற வோங்கிய பல்படைப் புரிசை
தொல்வலி நிலைஇய வணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்
மழையொடு மலையினி வந்த மாடமொடு

(மதுரைக் 352 - 355)

எனும் மதுரைக்காஞ்சியின் அடிகள் புலப்படுத்துகின்றன.

மாடங்களைச் சுற்றி அமைக்கப்பெற்ற சுவர்களுக்கு, உயர்ந்த கோபுரங்களையுடைய வாயில்களும், அவ்வாயில்களுக்குத் துருப்பிடியாதபடி சிவந்த நிறம் பூசப்பட்ட இரும்புக் கதவங்களும் பொருத்தப்பட்டிருந்ததைப் பின்வரும் நெடுநல் வாடைப் பாடல் பகுதியால் அறிகிறோம்.

ஒருங்குடன் வளை யோங்குநிலை வரைப்பிற்
பருவிரும்பு பிணித்துச் செவ்வரக்குரீஇத்
துணைமாண் கதவடி பொருத்தி, யிணைமாண்டு
நாளொடு பெயரிய கோளமை விழுமரத்தும்
போது அவிழ் குவளைப் புதுப் பிடிகால் அமைத்து:
தாழொடு குயின்ற போரமை புணர்ப்பிற்
கைவல் கம்மியன் முடுக்கலிற் புரை தீர்ந்து
ஐயவி அப்பிய நெய்யணி நெடுநிலை
வென்றெழு கொடியோடு வேழஞ் சென்றுபுகக்
குன்றுகுயின் றன்ன வோங்குநிலை வாயில்

(நெடுநல். 79 - 88)

மேற்கண்ட குறிப்புகளால், சங்ககாலத்தில் உயர்ந்த மாட மாளிகைகளும் கூடகோபுரங்களும் கைதேர்ந்த கலைஞர்களால், காண்பார் கண்ணையும் கருத்தையும் கவரத்தக்க வகையில் கட்டப்பட்டிருந்தன என்பது தெரிய வருகிறது.

சங்ககாலத்தில், இறைவன் எழுந்தருளியிருக்கும் கோயில்கள் பல இருந்தன. இதனை

பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே

(புறம்.: 6 :17 - 18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும்

அணங்குடை முருகன் கோட்டத்துக்
கலந்தொட மகளிர் (புறம்.: 99 :6 - 7)

எனவும் வரும் புறநானூற்று அடிகள் புலப்படுத்துகின்றன. புறநானூறு காலத்தில், அரசனுடைய அரண்மனையைத்தான் கோயில் என்று வழங்கினரே ஒழிய, இறைவனது உறைவிடத்தைக் கோயில் என்று வழங்கியதாகத் தெரியவில்லை. நகர் என்பதும், கோட்டம் என்பதுமே அக்காலத்து இறைவனுடைய உறைவிடத்தைக் குறிப்பிட வழங்கப்பட்ட சொற்களாகும்.

சங்க காலத்து இடிந்து வீழ்ந்த கோயில் ஒன்றை

இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்பறாத் துறந்த மரஞ்சேர் மாடத்து
எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று
ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்றிணை

என்று கடியலூர் உருத்திரங்கண்ணனார், வருணித்துள்ளார். இவையாவும், சங்க காலத்தில் தமிழ்நாட்டுக் கோயில்கள் செங்கல், மரம் முதலியவற்றைக் கொண்டு கட்டப்பட்டிருந்ததைத் தெரிவிக்கின்றன.

பண்டைத் தமிழ் மக்கள் கோயில்களையும், மண்டபங்களையும் மரங்களினாலும், செங்கற்களினாலுமே கட்டினர், அரசரின் மாளிகைகளும், உயர்ந்த மாடங்களும், தெய்வ நிலையங்களும் உலோகத் தட்டினாலும், சாந்தினாலும் வேயப்பட்டிருந்தன. உயர்ந்த மாடங்களில் அடுக்கு வீடுகளும், நிலா முற்றங்களும் இருந்தன.

வான மூன்றிய மதலை போல
வேணி சாத்திய வேற்றருஞ் சென்னி
விண் பொர நிவந்த வேயா மாடத்து
(பெரும் பாண் - 346-348)

சுடுமண்ணோங்கிய நெடுநகர் வரைப்பின்
(ஷெ.405)

நிரைநிலை மாடத்து அரமியந் தோறும்
(மதுரைக், 451)

எனும் குறிப்புகளால் மாடமாளிகைகள் இருந்ததை அறிகின்றோம்.

நன்றி க.த. திருநாவுக்கரசு
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியும் தோல்வியும் உலகத்து இயற்கை

குமாரசாமி சோமசுந்தரம்
தலைவர் கொழும்பு தமிழ்ச்சங்கம்

வெற்றி, தோல்வி; நன்மை, தீமை; இன்பம், துன்பம் என்பன மனித வாழ்க்கையில் புதுமைகள் அல்ல; புதினங்களும் அல்ல. அவை நிலவும் இருட்டும் போல, வாழ்க்கையில் மாறி, மாறி வந்து கொண்டிருப்பன. எவரும் சதா காலமும் வெற்றிக்கு மேல் வெற்றிகள் பெறுவதில்லை, அவ்வாறே எடுத்த காரியங்கள் அனைத்துமே தோல்விகளைச் சந்திப்பதில்லை, மேலும், இன்பங்களும் நிரந்தரமானவையல்ல துன்பங்களும் நித்தியமானவை அல்ல.

ஒளியின் முடிவில் இருளும், இருளின் முடிவில் ஒளியும் நிச்சயம் எதிர்பார்க்கப்பட வேண்டியவை இந்த எதிர்பார்ப்பு ஒருகாலும் வீண்போவதில்லை.

வெற்றியும் தோல்வியும் சகஜங்கள். இன்பமும் துன்பமும் யதார்த்தங்கள். எனவே, வெற்றியையோ, நன்மையையோ, இன்பத்தையோ கண்டு எவரும் அகம்பாவங் கொள்ளலாகாது அப்படி அகம்பாவங் கொள்வார்களேயானால், தோல்வியும், தீமையும், துன்பமும் அவர்களை நோக்கி நெருங்கி வந்து கொண்டிருக்கின்றன என்பது தான் அர்த்தம்.

வெற்றி, நன்மை, இன்பம், என்பனவற்றை ஒருவர் அளவோடும், அறிவு பூர்வமாகவும் அனுபவிக்க வேண்டும். என்பது நியதி. மாறாக அவற்றை அகம் பாவத்துடனும், உணர்ச்சி பூர்வமாகவும் அனுபவிக்க முயன்றால், அவை விரைவில் அவனை விட்டு அகன்று விடும். எனவே தான், மகாகவி பாரதியாரும்,

இன்பம், இன்பம், இன்பம்

இன்பத்திற்கோர் எல்லை காணில்

துன்பம், துன்பம், துன்பம் என்கிறார்.

பொதுவாக, தற்காலத்தில் எல்லோருமே வெற்றி, நன்மை, இன்பம், மகிழ்ச்சி என்பவற்றை துஷ்பிரயோகம் செய்கிறார்கள். வெற்றிக் களிப்பைப் பிறருக்கு இம்சை செய்து கொண்டாடுவதைக் காண்கிறோம். மகிழ்ச்சி மேலீட்டினாலும். இன்பப் பெருக்கத்தினாலும் பாவகாரியங்களில் பலர் ஈடுபடுவதைப் பார்க்கிறோம். மது அருந்துகிறார்கள், காமங் கொள்கிறார்கள், பிறரை நிந்தை புரிகிறார்கள், பிற உயிர்களைக் கொன்று விருந்து வைக்கிறார்கள். கர்வம், செருக்கு, தலைக்கனம் கொள்கிறார்கள். இவற்றை தான் மகிழ்ச்சி என்றும் இன்பம் என்றும் குதூகலம் என்றும் போற்றுகின்றார்கள் என்னே மனிதரின் அறியாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபுறம், மனிதநேயம், ஆன்மநேயம் என்றெல்லாம் பேசப்படுகின்றன. மனித உயிர்கள் மீது கொள்ளும் அன்பு, இரக்கம், பரிவு என்பது மனிதநேயம். உலகிலுள்ள சகல உயிரினங்கள் மீதும் கொள்ளுகின்ற அன்பு, அருள், கருணை என்பது ஆன்ம நேயம். ஆன்மநேயத்துள் மனித நேயமும் அடக்கம் என்பது நோக்கற்பாலது.

மறுபுறம், வெற்றியின் பெயரால், இன்பத்தின் பெயரால், களிப்பின் பெயரால், மனித இம்சைகளும், ஆன்மிக இம்சைகளும் நிகழ்த்தப்படுகின்றன.

பூனைக்கு விளையாட்டாம் சுண்டெலிக்குச் சீவன் போகுதாம் என்ற பழமொழியை ஒரு தரம் மீட்டுப் பார்ப்பது நன்று

வெற்றி, இன்பம், நன்மை, மகிழ்ச்சி என்பவற்றை நாம் துஷ்பிரயோகம் செய்யாமல் இருக்க வேண்டுமாகில், எம்மிலே மனிதநேயப் பண்புகளையும் ஆன்மநேயப் பண்புகளையும் மேம்படுத்திக் கொள்ளுதல் அவசியமாகும். இக்காலத்தில் மனிதர்களால் ஏன் படித்து அறிவு பெற்றார்களாலுங் கூட, மனிதநேய, ஆன்மநேயப் பண்புகள் உதாசீனஞ் செய்யப்பட்டு வருவதாலேயே, உலகெங்கணும் பல்வேறு பிரச்சினைகளும் முரண்பாடுகளும் தீர்க்கப்பட முடியாத அளவிற்கு பலகிப்பெருகி வருகின்றன.

மக்கள் நிம்மதியின்றி நிர்க்கதிக்கு உள்ளாகிறார்கள், அமைதியின்றி அல்லல்படுகிறார்கள், காரணம், மனிதர்கள், மனிதநேயத்தை மரணிக்கச் செய்தமையே என்பதை காலங்கடந்த நிலையிலாவது தெளிந்து கொள்வோமேயானால், விமோசனம் பெற வழிபிறக்கும்.

தோல்வி, துன்பம், தீமை என்பவற்றையும் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. தோல்வியைக் கண்டு துவண்டு விடுகிறார்கள். சிலர் மனம் உடைந்து போய்விடுகிறார்கள். ஈற்றில் மனநோயாளர் ஆகிவிடுகின்றனர். மனவருத்தம் உடல் வருத்தத்தை விடப்பயங்கரமானது. அடுத்தடுத்து வரும் தோல்விகளால், அவற்றை ஈடு செய்வதற்கென்று, மதுபானங்களில் தஞ்சம் அடைகிறார்கள், போதைப்பொருள்களை நாடுகின்றார்கள், அவற்றில் மூழ்கி விடுகிறார்கள். வாழ்க்கையில் தோல்வி என்ற காரணத்தினாலும், தாங்க முடியாத துன்பம், துயரம் என்ற காரணத்தினாலும் இவ்வாறு மதுவிலும், போதைப் பொருள்களிலும், காமப் பொருளிலும் திளைத்துத் தமக்குத் தாமே துரோகம் செய்வது தற்கொலைக்கு ஒப்பாகும். அது பெரும் பாவகாரியம். அந்த வகையில், தோல்வி, துன்பம், தீமை என்பன துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன.

எனவே, வெற்றியும் தோல்வியும், இன்பமும், துன்பமும், நன்மையும் தீமையும் உலகத்து இயற்கை என்பதை நாம் உணர்ந்து கொண்டு வாழ்வோமானால், நமக்கொரு கேடில்லை, உலகிற்கும் ஒரு தீங்கில்லை. இதனையே சமநோக்கு என்கின்றனர் அறிஞர்கள். இச்சமநோக்கு மனிதரிடம் இல்லாவிட்டால் வெற்றியும் தோல்வியாகும், இன்பமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமாகும். நன்மையும் தீமையாகிவிடும். வாழ்க்கையும் அடிதலை மாறிய நிலையை எய்திவிடும்.

வாழ்க்கையில் வெற்றி மேல் வெற்றி அடைய வேண்டுமென்பதற்காக, இளமையை ஏக்கத்துடனும், அங்கலாய்ப்புடனும், மனஉளைச்சலுடனும், வேதனைகளுடனும், கழிப்பவர் பலரைக் காண்கிறோம். வெற்றி பெற்ற பின்னருங்கூட, வெற்றியை அனுபவிப்பதாகத் தெரியவில்லை. மேலும் மேலும் வெற்றிகளைப் பெறவேண்டுமென ஏங்குகிறார்கள், அதனால் கவலையடைகிறார்கள், வேதனைப்படுகிறார்கள். சுருங்கச்சூறின், வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களாகக் கருதப்படுபவர்கள், வாழ்க்கையைச் சுவைப்பவர்களாகவோ, வாழ்க்கையில் களிப்படைபவர்களாகவோ, குறைந்தபட்சம் திருப்தி அடைபவர்களாகவோ தன்னிலும் தென்படவில்லை.

பொது வாழ்விலோ, அரசியல் வாழ்விலோ வெற்றி பெற்றவர்கள் அச்சத்துடன் வாழ்கின்றார்கள். சிறைக்கைதிகள் போல் சுதந்திரமின்றி அல்லல் படுகிறார்கள். பாதுகாப்புக்காக ஏங்குகிறார்கள். தனி வாழ்வில் வெற்றி பெற்றவர்கள், பெற்ற வெற்றிகளைத் தக்க வைக்கப் படும் பாடு பஞ்சுபடாப்பாடு. தமக்குக் கிடைத்த செல்வங்களையும், செல்வாக்குக்களையும் பாதுகாப்பதில் மிகுந்த சிரமங்களுக்குள்ளாகின்றனர். வெற்றிகளால் பெறப்படும் பின்விளைவுகள் என்ன? பொதுவில் எதிர்பார்ப்பவை, இன்பம், மகிழ்ச்சி, களிப்பு, திருப்தி, நிம்மதி என்பன. ஆனால் இக்கால வெற்றிகள் இவற்றைப் பிரசவிப்பதில்லை. மாறாக அவை அச்சம், பீதி, குழப்பம், ஏக்கம், பாதுகாப்பின்மை, அங்கலாய்ப்பு, அமைதியின்மை என்பவற்றையே பிரசவிக்கின்றன. இந்நிலைமைகள் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பது ஆராயப்பட வேண்டியது.

வெற்றிகள் வேண்டப்படாதனவா? அவை வெறுக்கப்பட வேண்டியனவா? இல்லவே இல்லை. வெற்றிகள் நிச்சயம் வேண்டப்படுவன. வெற்றிகள் வாழ்க்கையை வளம்படுத்த வேண்டுமே தவிர, சீரழிக்க வழி வகுக்கக் கூடாது.

வெற்றிகள், வாழ்க்கையின் நிம்மதியைக் குலைக்கின்றன என்றால், வாழ்க்கையைச் சீரழிக்க வழி வகுக்கின்றன என்றால், அந்த வெற்றிகளின் மீது குற்றஞ்சுமத்திவிட முடியாது. வெற்றிகளை அடைந்த வழிமுறைகளிலும், விதங்களிலுமே தவறுகள் இருப்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

வெற்றியை நல்ல வழியில், நீதிமுறையில், உழைத்துப் பெறவேண்டும். அப்போதுதான் வெற்றி நிலைக்கும், நல்லபயன்களையும் நல்கும். வெற்றியும் முக்கியம் அதற்கு மேலாக அதனை அடையும் வழியும் முக்கியம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆனால் இக்காலத்தவர் வெற்றியே முக்கியம், வழியல்ல என்கிறனர். வெற்றி பெறுவதற்காகச் சூழ்ச்சி செய்கிறனர். சதிபுரிகின்றனர், வன்முறைகளைக் கையாளுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தவறான வழிகளால் வந்த வெற்றி எப்படி நன்மையைத் தரும், அவ்வெற்றி அச்சத்தையும் அவலத்தையுந்தான் தரும், நிம்மதியைக் கெடுக்கத்தான் செய்யும். தோல்விகளும் மனித வாழ்க்கையில் சகஜம் தான் தோல்வியடையாத மனிதர்களே இல்லையெனலாம். தோல்விகளும் ஒரு வகையில் வேண்டப்படுவனவே. அதற்காக தோல்விகளை விரும்ப வேண்டும் என்பதல்ல தோல்வியைத் தழுவுதல் ஒன்றும் ஆச்சரியமானதல்ல. தோல்வியை ஏற்றுக் கொள்வதற்குத் தோற்றுவிடாமல், துவண்டு விடாமல், இருப்பதற்கு மகா தைரியம் தேவை. மீண்டும் முயற்களில் ஈடுபட, நேர்வழியில் வெற்றியை நோக்கி வீறுநடை போட, தான் விட்ட தவறுகளை ஆராய்ந்து தன்னைத் திருத்திக் கொள்ள தோல்விகள் வழிவகுக்கின்றன. அதனாலோ என்னவோ, தோல்விகள் வெற்றிக்கு அடிப்படையென்றும். வெற்றியை அடைவதற்குப் படிக்கற்கள் என்றும் கூறப்பட்டுள்ளன. தோல்வியடைந்தவர்களைச் சமாதானப்படுத்துவதற்கோ, தேற்றுவதற்கோ எழுந்து சம்பிரதாயக்கூற்றுக்கள் போல இவை தோன்றினாலும்., அவற்றில் உண்மையும் இல்லாமலில்லை.

தோல்விகள் ஒருவருக்குத் தன்னை ஆராய்வதற்குச் சந்தர்ப்பத்தை வழங்குகின்றன. தன்னை ஆராயும் போது தன்னிடமுள்ள குறை நிறைகளையும், பலம் பலவீனங்களையும் அறிந்து கொள்ள முடிகின்றது. அதனால் தன்னிலுள்ள குறைகளை நீக்கவும். பலவீனங்களை வெற்றி கொள்ளவும் இயலுகின்றது. அத்துடன் நிறைகளை மேலும் நிறைவாக்கவும், பலங்களை மேலும் ஸ்திரிரப்படுத்தவும் முடிகின்றது. இந்த வகையில் தன்னை அறிவதற்கும், அதன்வழி தன்னிறைவு பெறுவதற்கும் தோல்விகள் ஒருவர்க்குத் தூண்டிகளாக அமைகின்றன. எனவே, எமக்கு நேரும் தோல்விகளை, இந்த விதத்தில் கருத்துக் கொண்டு, எடுத்துக் கொண்டால், தோல்வியும் வெற்றியாகி விடுமல்லவா? தோல்வியை நாம் பார்க்கும் பார்வையில் தான் அதன் நன்மையும் தீமையும் தங்கியிருக்கிறது. என்பதை உணர்ந்து கொள்ளுதல் அவசியம்.

வெற்றியும் தோல்வியும் வாழ்க்கை எனும் நாணயத்தின் இருபக்கங்கள் என்கிறார்கள். நாணயம், அதன் இரு பக்கங்களும் சரிவர இருக்கும் போதுதான், பெறுமானம் உள்ளதாக விளங்குகின்றது. வாழ்க்கையும் அதன் இரண்டு பக்கங்களான வெற்றியையும் தோல்வியையும் கொண்டிருக்கும் போதுதான் பெறுமதியும் பெறுமான மதிப்பும் வாய்ந்ததாக விளங்கும். தோல்வி ஒருவனைச் சிந்திக்க வைக்கிறது. செயற்படத் தூண்டுகிறது. அவை அதன் நல்ல அம்சங்கள் அதே வேளை, வெற்றி, ஒருவனைப் போதைக்குள்ளாக்குகிறது. அவனுக்குக் கர்வத்தையும் செருக்கையும் உண்டாக்குகிறது. தலைக்கனத்தை ஏற்படுத்துகிறது. அவை அதன் கெட்ட அம்சங்கள், எனவே, வாழ்க்கையில் கெட்டவற்றை நீக்கி, நல்லவற்றை ஏற்கும் பண்பினை மனிதர்களாகிய நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொன்றிலும் நல்லதும் உண்டு, கெட்டதும் உண்டு, என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வி, வெற்றி இரண்டிலும் நன்மை தீமைகள் உண்டு. இவ்விரண்டுமே நல்ல படிப்பினைகளைத் தருகின்றன. அவை நல்வாழ்விற்கு நலம் புரியக்கூடியன. குறிப்பாக, தோல்விகள் நிறையப் பாடங்களைப் புகட்ட வல்லன.

கண்டுபிடிப்பாளர்கள், விஞ்ஞானிகள், சமூகத் தலைவர்கள் யாவரும் இறுதியில் அடைந்த வெற்றிகளுக்குப் பின்னால் தோல்விகள் தான் ஏராளம். முதலில் எதிர்கொள்ளும் தோல்விகளைக் கண்டு, ''அன்று விட்டேன், கொண்டலடி'' என்று வாழாவிருந்திருப் பார்களேயானால் அவர்கள் பெற்ற வெற்றிகளை, அடைந்திருக்கமாட்டார்கள்.

பகல் ஒளிர்வதற்கும் அழகாக இருப்பதற்கும் காரணம் இருள் என்று ஒன்று இருப்பதால்தான். வெற்றிகள் ஜொலிப்பதற்குத் தோல்வி என்ற ஒன்று இருப்பதும் காரணம் ஆகலாம். தோல்வியே இல்லாத உலகினை ஒருமுறை கற்பனை செய்து பாருங்கள், ஆம், சோபையை இழந்த ஓர் உலகினையே காண்பதாக அமைந்திருக்கும். அது எப்படியெனில், எதிர்க்கட்சி இல்லாத பாராளுமன்றம் போல எனலாம். எனவே, தோல்வியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா.

தோல்விகள், வெற்றிக்கு எந்த விதத்திலும் குந்தகமாக இல்லை. மாறாக வெற்றியை அடையப் பேருதவியாக உள்ளன. தோல்விகளைக் கண்டு அஞ்சி ஒதுங்கிக் கொண்டால் வெற்றி ஒரு போதுமே கிட்டாது. தோல்விகளை ஏற்று, தம்மை ஆராய்ந்து, குறைகளை நிவர்த்தி செய்து, நேர்வழியில் சென்றால், வெற்றி நிச்சயம் ஆகிவிடுகிறது இந்த உண்மையை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும் . தமது தோல்விக்குப் பிறரில் குற்றம் காணமுயல்வதும் தவறு ஆகும்.

வெற்றியை அடைந்தவர்கள் கர்வமோ, செருக்கோ கொள்ளலாகாது வன்செயலிலோ காடைத்தனத்திலோ ஈடுபடக்கூடாது. அவை உடனடியாக வீழ்ச்சிக்கு வழிவகுத்துத் தோல்வியைத் தழுவச் செய்யும். எப்படித் தோல்வியடைந்தவர்கள் தமது உள்ளங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமோ. வெற்றியடைந்தவர்கள் தத்தம் தலைகளைப் பேணிக் கொள்ள வேண்டும்.

தோல்வியைக் கண்டு எவனொருவன் சிரிப்பதற்கான தைரியத்தையுடையவனா யிருக்கின்றானோ, அவனே வெற்றிபெற்றவனாகின்றான். வெற்றி கொள்வதிலெல்லாம் தோல்வியை வெற்றி கொள்ளுதலே அதிசிறந்த வெற்றியாகும். ஒரு வெற்றி கொள்ளுதலே அதிசிறந்த வெற்றியாகும். ஒரு வெற்றியைப் பெறுவதற்குப், பொய் பேசுவதையும், பிறரை வஞ்சிப்பதையும், ஏமாற்றுவதையும், கொலை செய்வதையும், வன்முறையில் ஈடுபடுவதையும் வழியாகக் கொள்வதை விடத் தோல்வியைத் தழுவுவது மேலானதாகும். தோல்விகள் கூடாதனவுமல்ல வெற்றிகள் எல்லாம் நன்மையைத் தருவனவுமல்ல என்பதை உணர்ந்து கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் திருவூர் தந்த கொடைவள்ளல் உயர் திரு. ஆ. மா. சுப்பிரமணியம்

ஆறுமுகம் குகமூர்த்தி
துணைத் தலைவர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

பண்புடையார் பட்டுண்டு உலகு என்ற குறளின் அடிகளுக்கிணங்க இவ்வுலகுக்குப் பொருத்தமான அரிய பணிகளை ஆற்றி வருபவர் ஸ்ரீமான் சுப்பிரமணியம் அவர்கள். சமயப்பணி, தமிழ்ப்பணி, கல்விப்பணி என ஆற்றிய கருணைப் பணிகள் பட்டியல்ப் படுத்தப்பட முடியாதவை. மணியம் அவர்களின் மகத்தான கொடைக்கு மனையறத்தின் வேராக விளங்கும் திருமதி மாலதி சுப்பிரமணியத்தின் பண்பினைப் போற்றாதவர்களில்லை. கொக்குவில் மேற்கில் கோலோச்சிய மாணிக்கம் குடும்பத்தின் மாண்பு பெருமைக்குரியது. மஞ்சவனப்பதி முருகனின் மீளா அடியவர்களாகிய இக் குடும்பத்தவர்கள் செய்த தவத்தின் பயனாக உதித்தவர் சுப்பிரமணியம் அவர்கள். பரோபகாரச் சிந்தனையுடன் உழைப்பால் உயர்ந்த உத்தமர் ஆற்றி வரும் உவமையில்லாப் பணிகளை நன்றியோடு வாழ்த்துவதற்கு நாம் கடமைப்பட்டவர்கள். பலபேரிடம் செல்வம் இருந்த போதும் அதனைப் பலரும் பயன்படக் கொடுக்கும் மனம் எல்லோருக்கும் வருவதில்லை. கொடையும் தயையும் பிறவிக் குணம் என முன்னோர் கூறியதை மெய்ப்பித்துத் தன் குலப்பெருமையை நின்று நிலைக்கச் செய்தவர். பள்ளித்தலம் அனைத்திற்கும் பாங்குடனே பணிபுரியும் இப்பெருமகனின் உள்ளம் விசாலமானது. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் இப்பெருமகனை நாடி எம் குறைபோக்குமாறு வேண்டிய போது மறுவார்த்தையின்றி அக முக மலர்ச்சியோடு ஏற்றுக் கொண்டார். குறிப்பிட்ட சில மாதங்களில் அவரது சிந்தையில் எழுந்த கட்டடப்பணி நிறைவு கண்டுள்ளது. கொழும்பு தமிழ்ச்சங்கம் கொடை வள்ளல் சுப்பிரமணியத்தின் ஒப்பற்ற பணியினை என்றும் நன்றியோடு நினைவுகூரத் தவறமாட்டாது. ஆழமாக அனுதினமும் சிந்தித்து நேர்த்தியான பணிகளை நிறைவேற்றி வரும் இவரை யாரும் ஏமாற்றிவிட முடியாது. எத்துறையிலும் நிறைந்த அனுபவ ஞானமுடையவர் இவர். காலத்தின் கண்ணாடியாக எதனையும் அறியும் அபூர்வ ஆற்றல் இவரது தனிச்சிறப்பாகும். தாய்மொழி மீதும் தான் பிறந்த திருவூர் மீதும் அளவற்ற காதல் கொண்ட ஸ்ரீமான் சுப்பிரமணியம் அவர்களைச் சந்திந்தமையை ஒரு பேறாகக் கருதி இப் பெருமகனாரையும் அவர்தம் குடும்பத்தினரையும் வாழ்த்தி வணங்கி அமைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15.09.2005 இல் கொழும்புத் தமிழ்ச் சங்க
சுப்பிரமணியம்-மாலதி மண்டபத்தின் கால்கோள் விழாவின் போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு சுப்பிரமணியம் தம்பதியினரின்

## ஏனைய உபகரிப்புக்களின் கண்ணோட்டம்

சுப்பிரமணியம் மாலதி
ஆரம்ப சுகாதார
பராமரிப்பு
முன்பள்ளி
நிலையம்





கொக்குவில் இந்துக்கல்லூரி நூற்றாண்டு விழா மண்டபம்
பாக்கியம் மாணிக்கம் ஞாபகார்த்த மண்டபம்

மஞ்சவனப்பதி முருகன் கல்யாண மண்டபம்,
பாக்கியம் மாணிக்கம் கலை கலாச்சார மண்டபம்



கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை திறப்பு விழா



கொழும்பு இந்துகல்லூரி மூன்று மாடி கட்டிட அத்திவாரமிடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழி என வாழ்த்துவோம்

வாரிதியின் பொற்கரங்கள் தொட்ட ணைக்க
வங்கக்கடல் தனிலிலங்கும் முத்தா மன்ன
சீரிலங்கைத் திருப்பதியின் தொன்மை மிக்க
தமிழ்ச் சங்கம் கொழும்புத் தமிழ்ச் சங்க மாகும்
காரழிக்கத் தோன்றுகின்ற கதிர வன்போல்
கல்விக்கு ஒளிபாச்சும் புவியி னோர்க்கும்
பண்ணவனின் பரிசிலைப்போ லாகு மன்றோ

வானுயரத் தோன்றுகின்ற கட்டி டங்கள்
வளர்ச்சியினைக் காட்டுகின்ற அடயா ளங்கள்
ஞானவொளி ஊட்டுதற்காய் நூல கத்தை
நல்லோர்கள் ஆக்கிவைத்தார் அற்றை நாளில்
தேனுகர மொய்க்கின்ற வண்டி னம்போல்
செந்தமிழின் செல்வங்கள் சேருகின்றார்
தானமன்றோ அன்னவர்க்குத் தமிழ்ச்சங் கத்தில்
தோன்றியுள்ள நூற்பொதிகை தமிழ்த்தாய் வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்த்தமிழின் வளர்ச்சிக்குத் தொண்டு செய்யும்
தன்னிகரிற் போதையினால் பணம்ப டைத்தோர்
ஓயாது வழங்குகின்ற கரத்தால் அள்ளி
உவந்து பொன்னைக் கொட்டுகின்றார் உதவும் - நோக்காய்
தூயபெருந் தொண்டன்றோ மொழிக்காய்ச் செய்யும்
தருமத்தைப் புகழமொழி தாமும் உண்டோ
வாயார வாழ்த்திடுவோம் வழங்கு வோரை
வளர்க அவர் செல்வமென வாழ்த்துச் சொல்வோம்

பிஞ்சுகளின் கல்வியுயர் மேம்பாட் டிற்காய்
கைதந்தார் இன்றொருவர் சுப்ர மண்யம்
பஞ்சுநிகர் மென்மனத்தின் சொந்தங் கொண்டோர்
பாலகர்பால் பாசம் மிகக் கொள்வா ரின்று
கொஞ்சுமெழிற் கூடமொன்று மூன்றாம் மாடி
கொண்டுளது அன்னவர்க்காய் கைகொடுத்த
நெஞ்சினை நாம் போற்றிடுவோம் நன்றி சொல்வோம்
நீடுழி வாழ்கவென வாழ்த்து ரைப்போம்.

**ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சங்க மூன்றாம் மாடித் திறப்பு விழா
# (சுப்பிரமணியம் - மாலதி மண்டபம்)

## வந்திப்போம் வாழி வளர்ந்து

1. நாற்பத் திரண்டுபேர்ச் நாலுபக்கப் பொற்காணி
நோற்றவெம் நற்றவமாய் நேரவாங்கே - ஆற்றும்
பணியாய் தலைவரவா் சங்கரப் பிள்ளை
மணிமாடம் காண்பீா் மகிழ்ந்து.

2. பனைநூறு பாடிய பொன்னம் பலமுதல்வன்
நினைதோறும் எம்சங்கத் தாபகரே - மனைவிளங்க
மாடமொடு முத்தட்டு மாளிகைகள் மேகமுர
ஆடலிறை தானே துணை.

3. போற்று முதலிபொன் னம்பலம் பின்னவராம்
ஏற்ற முறுசபா ரத்தினமே - வீற்றிருந்து
நற்பணியாய் நல்மனையை வாங்க நிதியளித்தாா்
நிற்கதமிழ்ச் சங்கமென நோ்ந்து

4. முன்ன ரெழுந்த முதலாம்மும் மாடிதாமும்
முன்னின்று பேரழகு மின்னிடவே - பொன்னகரில்
பூண்ட தலைவர்மு. வைரவப் பிள்ளைநாள்
காண்டனவே கால்கோள் களித்து

5. ஏற்றமிகு வர்த்தகராம் சுப்ர மணியமருட்
பேற்றென்மூன் றாம்மாடி முற்றுறவே - ஊற்றெனவே
உள்ளத்தால் வாழ்த்தி உவந்தோம் தமிழ்ச்சங்கம்
வெள்ளம் போல் நன்றி விளம்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மாண்புகழ் மாடங்கள் மூன்றதாக மாடியொன்றிற்
காண்டகு நூலகம் காட்சிதரும் - ஆண்டுயரப்
பொன்விழாக் கண்ட தமிழ்ச்சங்கம் போற்றிடுமே
மின்னும் பணிபலவாம் மேல்.

7. மண்டபங்கள் நான்காம் மக்களெல்லாம் கூடிநிற்கக்
கண்டவர்க் கென்றுமே காட்சியாக - எண்டிசையும்
முச்சங்கம் போற்புகழ் பூக்கத் தமிழ்காத்து
இச்சங்கம் வாழ்க இனிது

8. அக்கால நற்பணிக்கும் அச்சாணி யாகிநின்று
இக்கால போற்றுசெயல் வீரனாக - முக்காலம்
ஓர்ந்த பொதுச்செயலர் கந்தசாமி தம்பணியும்
சேர்ந்திடாதே வாழி சிறந்து

9. சங்கத் தலைவராய்ச் சால்பொழுக வீற்றிருந்தார்
இங்கிரு பத்திருவர் ஈடினையில் - மங்களமார்
முந்து திறப்புவிழா நாயகமோர் சுந்தரமே
வந்திப்போம் வாழி வளர்ந்து.

10. சங்கொடு தாமரை சின்னமென ஏடுமாகப்
பொங்குதமிழ்ச் சங்கம் புகழ்பரப்ப - எங்கணுமே
பொய்ப்பொருள் நீக்கிப் பொலிந்தமெய்ஞ் ஞானமெடு
மெய்ப்பொருள் காண்ப தறிவு

**பாவாக்கம்**

பன்மொழிப்புலவர் த. கனகரத்தினம்

பி. ஏ. (இலண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையமைப்புக் குழுவின் அறிக்கை

அமிழ்தினுமினிய அழகிய தொன்மைமிகு தமிழ்மொழியின் சிறப்புக்களையும் அதன் செழுமைகளையும் பண்டைய தமிழ்ச் சங்கவழியில் நின்று கடந்த 63 ஆண்டுகளாக எமது சங்கமானது அழகுமிகு தலைநகர் கொழும்பிலிருந்து முழு உலகிற்கும் பரப்பி வருவது யாவரும் அறிந்ததே.

தமிழ்ச் சங்கம் தனது பணிகளைத் திறம்பட ஆற்றவென பல உபகுழுக்களைத் தன்னகத்தே கொண்டியங்குகிறது. இக்குழுக்களில் எமது நிலையமைப்புக்குழு சங்கம் தனது பணிகளை சிறப்பாக ஆற்றத் தகுந்த களம் அமைத்து அயராது உழைத்து வருகின்றது.

இவ்வகையில் திரு.பெரியதம்பிப்பிள்ளை விஜயரெத்தினம் அவர்கள் தலைவராக இருந்த கடந்த (2003 - 2005) காலப் பகுதியில் சீகல் புரொப்பட்டிஸ் நிறுவன அதிபர் திரு நவரட்ணசிங்கம் வாகீசன் மற்றும் செனட்டர் எஸ்.ஆர். கனகநாயகம், திரு.சாம் வாகீசன், திருமதி. செல்லம்மா இராஜேந்திரம், திரு. இரா. மயில்வாகனம் ஆகியோரின் குடும்பத்தினரதும் ஹரிஸ் அன் மெனுக் நிறுவனத்தினரினதும் உதவியுடன் நூலகத்திற்கு மேலான 2ம் மாடியையும் 5 அறைகளையும் கட்டிச் சங்கம் சிறப்பாக பணியாற்ற உதவியது.

இவ்வருடமும் இக்குழுவின் செயற்பாட்டால் ரகு இன்ரநாஷனல் லிமிடெட் அதிபர் திரு. ஆ. மா. சுப்பிரமணியம் அவர்களின் உதவியுடன் "சுப்பிரமணியம் - மாலதி" மண்டபவேலைகள் நிறைவுற்றுள்ளன. இதனால் சங்கப்பணிகளை எமது சமுதாயத்திற்கு பயன்தரு வழிகளில் சிறப்பாக விஸ்தரிக்கக் கூடிய சூழல் உருவாகியுள்ளது.

இம்மண்டப வேலைகள் நிறைவுற உதவிய ஒப்பந்தக்காரர் திரு. சேனகா நவரட்ணவீரா அவர்களுக்கும், மண்டபத் திறப்பு விழா சிறக்க உதவிய அனைவருக்கும், இம்மலருக்கு வாழ்த்துரை, கட்டுரை, கவிதை தந்துதவிய பெரியோர்களுக்கும், இம்மலரை அச்சிட்டு வெளியிட உதவிய கீதா பப்ளிக்கேசன் நிறுவனத்தினருக்கும் எமது குழுவின் சார்பில் நன்றி தெரிவிக்கின்றேன்.

மேலும் முச்சங்க முழுப்பணிகள் முழுவுலகும் விளங்க வைக்கும் எம்சங்கப் பணிகள் சிறக்க உதவிய சங்கப்புலவர் ஆ.மா. சுப்பிரமணியம் குடும்பத்தினருக்கு எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்து.

மேலும் 3ம் மாடியில் 5 அறைகள் கொண்ட தொகுதி அமைக்கப்படவுள்ளது அப்பணிக்கு அனைவரதும் ஆதரவு கோரி உங்களிடமிருந்து விடை பெறுகின்றேன்.

''தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவும் வகை செய்திடுவோம்''

நன்றி

**மா. சடாட்சரன்**
நிலையமைப்புக்குழுச் செயலாளர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ

# "மொழி வளர்ச்சி"

**-கம்பவாரிதி இ. ஜெயராஜ்**

உலகில் மானுட இனத்திற்கு இறைவனால் தனித்து வழங்கப்பட்ட வரமாய் விளங்குவது, மொழி.
ஐந்தறிவுக்குட்பட்ட மற்றைய ஜீவராசிகள் இப்பேறு எய்தில.
அவற்றுக்கு மனம் எனும் சூக்கும உறுப்பு பூரணப்படாமையின்,
எண்ண விரிவு இலதாயிற்று.
உடற்தேவையே அவற்றின் உணர்வாக வரையறுக்கப்பட்டது.
காமம் போன்ற உணர்வுகளிற் கூட அவை கால வரையறைக்குட்பட்டு நிற்பதே,
அதற்காம் சான்று.
ஆதலால்,
சொற்பமான தம் உணர்வுகளை வெறும் சப்தங்களால் அவை பகிர்ந்து கொண்டன.
மனம் எனும் சூக்கும உறுப்பைப் பூரண வளர்ச்சியோடு பெற்ற மனிதனோ,
மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் அறிவுக்கருவிகளால்,
உள் வாங்கிய செய்திகள் கொண்டு,
மனதை இயக்கி,
பலவாய்ச் சிந்திக்கத் தலைப்பட்டான்.
இச் சிந்தனை விரிவில்,
உணர்வுகள் பிறந்தன.
உணர்வுக் கலப்பினால் எண்ணங்கள் ஆயிரமாய் விரிய,
அவ்வெண்ணங்களை மற்றவரோடு பகிர்ந்து கொள்ளும் தேவை,
மானுடனுக்கு அவசியமாயிற்று.
மற்றைய ஜீவராசிகள் போல் விரிந்த தம் எண்ண வெளிப்பாட்டினை,
ஒரு சில சப்தங்களுக்குள் அடக்க இயலாமை அறிந்து,
அவன்,
உணர்வுகளை முழுதாய் உள்வாங்கி,
மற்றவரோடு பகிர்ந்து கொள்ளும்,
ஒரு கருவியின் தேவை உணர்ந்தான்.
செவ்விதாய ஒரு மொழியை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு,
முதல் முயற்சியாய் ஓசைகளை வரையறுத்து,
அவற்றை அட்சரங்களாக்கினான்.
பின் அவ்வட்சரங்களைத் தொகுத்துப்,
பொருள் குறிக்கும் சொற்களாக்கினான்.
நிறைவாக, அச் சொற்களை இணைத்து வாக்கியங்களாக்கிய அவன்,
அவ் வாக்கியங்களைத் தன் கருத்தினைக் காவும் கருவியாக்கி,
பின் அக்கருவியை நுட்பங்களுடன் கையாளும் திறன் பெற்று
மொழியாக்க முயற்சியில் முழு வெற்றி கொண்டான்.

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட எல்லைகளால் மனித இனம் குழுக்களாய்ப் பிரிக்கப்பட,
அக் குழுக்களின் பிரிவுக்கேற்ப,
அவற்றால் ஆக்கப்பட்ட மொழிகளும் பலவாயின.
அக் குழுக்களின் காலத்தொன்மையால்,
அவற்றின் அனுபவப் பதிவு நீள,
அவ் அனுபவத்தாற் பெறப்பட்ட அறிவுக் கூர்மையே,
அவ்வக்குழுக்களின் மொழிக் கூர்மை ஆயிற்று.
ஆதலால்,
காலம் தரும் அனுபவம்,
அனுபவம் தரும் அறிவு,
அறிவு தரும் கூர்மை,
எனும் தொடர்பு கொண்டு,
மறுதலையாய்,
அவரவர்மொழிக் கூர்மையால் அம் மொழி பேசும் இனத்தின்,
காலத் தொன்மை வரையறை செய்யப்பட்டது.
தன் அழிவோடு,
தான் அனுபவத்தால் பெற்ற அறிவும் அழியும் அபாயமுணர்ந்த மனிதன்,
மொழியாக்கத்தினால் அவ் அபாயத்தினைத் தடை செய்தான்.
நித்தியமற்ற மனிதன்,
தன் எண்ண வளர்ச்சியை மொழியில் பதிவு செய்ததால்,
அவன் அனுபவப்பதிவுகள்,
அவனோடு அழிந்து போகும் அவலம் நீங்கி நித்தியம் பெற்றன.
அதனால்,
திரும்பத்திரும்ப ஒரே அனுபவத்தைப் பெறுதலின்றி,
ஒருவர் அனுபவத்தை மற்றவர் பெற்று,
புதிது புதிதாய்த் தேடும் வாய்ப்பு மானுடர்க்குக் கிட்டியது.
பல்லாயிரக்கணக்கான மானுடரின் பல நூற்றாண்டு அனுபவங்கள்,
மொழியில் தொகுப்பாக,
மொழி அறிவுக் களஞ்சியமாயிற்று.
அதுவே பின் கல்வி எனப்பட்டது.
தேடுவோர் தொகை காலத்தால் நீண்டு முடிவற்றுப்போக,
கல்வியும் கரையிலதாயிற்று,
உணர்வு வெளிப்பாட்டுக்காய் மனிதனால் வளர்க்கப்பட்ட மொழி.
அறிவுக்களஞ்சியமாகி,
பின் அவனையே வளர்த்தது.
அறிவைத்தேக்கும் களஞ்சியமாகவும்,
பின் அவ்வறிவை வெளிப்படுத்தும் கருவியாகவும் ஆகி,
மொழி அற்புதம் செய்தது.
இதனால் மொழி மானுடத்தின் தனி அடையாளமாய்ப் போக,
வாழ்வின் பல கூறுகளிலும் அதன் அவசியம் உணரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுட வாழ்வைப் பூரணமாகத் தம் நூலுள் அடக்கிய வள்ளுவரும்,
சமூக இணைப்பு நோக்கி,
இல்லறத்திற்கு மொழியினை,
"இன்சொல்லாகவும்"
அறவரையறை செய்வதன் அவசியம் நோக்கி,
துறவறத்திற்கு மொழியினை,
"வாய்மையாகவும்"
செயலின் வெற்றி குறித்த நிர்வாகத்திறன் நோக்கி,
பொருட்பாலில் மொழியினைச்
"சொல்வன்மையாகவும்"
மயக்க நிலையாகிய காம இன்பத்திற்குப் பொய்மையே இனிமைபயத்தலின்,
அது நோக்கி காமத்துப் பாலில் மொழியினை,
"புனைந்துரையாகவும்",
வரையறை செய்து வியப்பூட்டுவர்.
இங்ஙனமாய்,
வாழ்வின் பல நிலைகளிலும் மொழியின் தேவை,
வள்ளுவத்தாலும் விரிக்கப்படும்.

❖ ❖ ❖

அறிவு வெளிப்பாட்டுக் கருவியாய் மொழி அமைந்து போக,
விதியினாலும், அனுபவத்தினாலும் கல்வியினாலும் அமையும்,
தனி மனித அறிவு,
அவரவர் வாய் மொழி கொண்டே கணிக்கப்பட்டது.
ஆதலால்,
மொழி,
மனித அறிவுத் திறனை எடைபோடும் நிறை கோலாயிற்று.
ஆரம்பத்தில் உணர்வுகளை வெளிப்படுத்த,
நீண்டு வளர்ந்து வெளிப்பட்டமொழி,
மனித அறிவு கூர்மைப்படக் கூர்மைப்பட,
சுருங்கலாயிற்று.
மானுடன்,
ஒரு சில சொற்களுக்குள்,
நீண்ட உணர்வை வெளிப்படுத்தும் வன்மை பெற்றான்.
அவ்வளர்ச்சியில்,
மொழிக்கருவியின் முதலங்கமான,
தனி அட்சரங்களும் பொருள்தரும் சொற்களாயின.
அட்சரங்களற்ற சப்தங்களும்,
பொருள் வெளிப்பாடு செய்தல் சாத்தியமாயிற்று.
சப்தங்களற்ற அங்க அசைவுகளும் கூடப் பாஷையாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் உச்ச நிலையாய்,
பார்வைக் கூறுகளே பாஷையாய்ப் பயிலப்பட்டன.
இந் நிலையையே,
**“மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து”.**
என அறத்துப் பாலிலும்
**“பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்,
வகைமை உணர்வார்ப் பெறின்”.**
எனப் பொருட் பாலிலும்.
**“கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்,
என்ன பயனும் இல”.**
எனக் காமத்துப் பாலிலும்,
வள்ளுவரும் பதிவு செய்கிறார்.
உணர்வொத்த இருவரிடத்து,
சப்தத்தினாலும், அங்க அசைவுகளாலும், பார்வைகளாலும்,
வெளிப்படும் குறிப்புக்களே,
விரிந்த மொழி வெளிப்பாட்டின் தேவையைப் பூர்த்தி செய்தன.
இது தவிர,
உணர்வொத்த இருவர் குறிப்பால் வெளிப்படுத்தும் வாய்ச் சொற்கள்,
தம் வழமைப் பொருள் இழந்து,
அவ்விருவர்க்குமாம் தனியர்த்தம் பேசின.
மொழியாக்கத்தின்முன்,
அங்கங்களாலும், பார்வைகளாலும்,
உணர்வைப் பரிமாறிய மனிதனின் ஆரம்ப நிலையே,
மொழி வளர்ச்சியில்,
கருத்து வெளிப்பாட்டின் உச்ச நிலையும் ஆயிற்று.
மொழி வல்லமை கூர்மை பெற்றுக் கைவர,
குறிப்பினால்,
ஒரு சில சொற்களுள்,
பல பொருட்களை உள்ளடக்கி,
பேசும் வல்லமை,
புலவர்க்குச் சாத்தியமாயிற்று.
அவ்வல்லமையால் கவிதைகள் தோன்றின.
அங்ஙனம் புலவர்களால் ஆக்கப்பட்ட கவிதைகள்,
சூத்திரங்கள் எனப்பட்டன.
அப் புலவர்களின் அறிவு நிலையை ஒத்து,
குறிப்பறியும் வல்லமை பெற்ற,
பின்வந்த வல்லார் சிலர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வரிகளால் அமைந்த அக்கவிதைகளுள் நுழைந்து,
பல பொருள் கண்டனர்.
இவ் வளர்ச்சியில்,
குறிப்பறிதலே மொழியின் உயர் நிலையாயிற்று.
அதுவே,
மானுட வளர்ச்சியின் மாண்புறு நிலையாகவும் பேசப்பட்டது.
"குறிப்பறியமாட்டாதான் நன்மரம்" என ஔவை பேச,
வள்ளுவரோ குறிப்பறிதல் எனும் ஒரே தலைப்பில் இரு அதிகாரங்களை,
பொருட்பாலிலும், காமத்துப் பாலிலும் அமைத்து,
குறிப்பறிதலின் உயர்வுணர்த்தினார்.

♦

இங்ஙனமாய் மீண்டும் மொழி சுருங்க.
சுருங்கப் பேசுதலும், விளங்கப்பேசுதலுமே,
மொழி வன்மையாயிற்று.
இவ்விரு தகுதிகளின் உச்ச வெளிப்பாடே,
வள்ளுவர்தம் குறளாம்.
அறிவுக் கூர்மையால் சுருங்கிய மொழி,
காலவோட்டத்தில்,
தமிழர் மத்தியில் மீண்டும் விரியத் தலைப்படுகின்றது.
மொழிப் பிரயோகத்தில்,
நீளமாய் எழுதலும், பேசலுமே,
அறிவு வளர்ச்சியாய்க் கருதப்படும் தாழ்நிலை இன்று.!
பரீட்சைகளில் கட்டுரை எழுதப் பணிக்கப்படும் மாணவர்க்கு,
கட்டுரை பற்றிய அறிவுறுத்தலும், புள்ளியிடலும்,
பொருளளவினாலன்றி,
சொல்லளவினாலேயே வரையறை செய்யப்படுகின்றன.
பத்திரிகைகளும்,
பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கான சன்மானத்தை,
இச் சொல்லளவு கொண்டே தீர்மானிக்கின்றன.
பல்கலைக்கழக ஆய்வுகள் கூட,
பக்கங்களின் அளவு கொண்டே பரிசீலிக்கப்படுகின்றன.
ஆதலால்,
கூர்மையுற்று சுருங்கிய நம் தமிழ் மொழி,
இன்று பின் நோக்கிச் சிதைவுற்று நீண்டு வருகின்றது.
இந் நிலை தவிர்க்க முன்வாருவார் யார்?
அனைவரும் முயல்வோம்.

♦ ♦ ♦


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலமாக வாழ்வோம்

கா. வைத்தீஸ்வரன்
உளநல ஆலோசகர்.

எம்மை நாம் நேசிக்கக் கற்றுக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கின்றோம். எம்மில் எமக்கு அக்கறை இல்லையா எனப்பலர் சிந்திப்பதும் உண்டு. ஆனால் எமது நம்பிக்கைகள், நாம் வாழ்ந்த சமூகப்பின்னணி, கலாசாரம், கல்விசார்ந்த பின்னணி, பழக்கவழக்கம் முதலான காரணமாக எம்மை அறியாது எமக்குத் தீங்கை ஏற்படுத்துபவர்களாகவும் சிலசமயங்களில் மாறிவிடுகின்றோம். உடல், உள, சமூக, ஆன்மிக ரீதியாக நாம் ஒவ்வொருவரும் எம்மை நேசித்தல், பேணுதல், பாதுகாத்தல் மிகவும் இன்றியமையாததாகும்.

## 1. உடல் ரீதியாக நேசித்தல்

அ.) உணவு எமது அடிப்படைத் தேவை என்பதை நாம் அறிவோம். ஆனால் பற்றாக்குறை ஏற்படும் போது. வளர்ச்சியுடன், உடல் விருத்தியும் பாதிப்பு அடையமுடியும். குறிப்பாகப் பாலர்பருவத்தில், குழந்தைகள் வேகமாக வளரும் அளவுக்குப் போதியளவு உணவுகிடைக்காவிடின், குழந்தையின் மூளை வளர்ச்சியும் பாதிப்பு அடையமுடியும். அதே போல கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய், வளரிளம் பருவத்தினருக்கும் நிறை உணவு இன்றியமையாததாகும்.

### ஆ. காரமான உணவின் பாவனை

கூடிய காரமான உணவுகளைத் தயாரித்து உண்ணும் போது, சிலசமயங்களில் உண்ணும் போதே கண்ணால் நீர்வடிகின்றது. உணவில் உறைப்பு அதிகமாகச் சேர்க்கும் போது சொண்டு எரிவதை உணரமுடியும். அத்துடன் உணவுக் கால்வாய் அழற்சி அடைவதைத் தவிர்க்கமுடியாது. மேலும் மன அழுத்தம் ஏற்படும் போது குடலில் அமிலம் சுரக்கிறது. கூடுதலாக அமிலத்தன்மை அதிகரிக்கும் போது உணவுக்கால்வாய் புண்ணாகிறது. அது மாத்திரமல்லாமல், ஒருசிலர் மலங்கழிக்கும் போது, எரிவுடன் மலம் கழிவதை உணரமுடியும். எனவே உறைப்பு அளவாகக் குறைத்துப் பாவிப்பது உடலாரோக்கியத்திற்கு உகந்ததாகும்.

### இ. உப்பின் பாவனை

சராசரியாக எமது சமுதாய அமைப்பில் 15 கிராம் உப்பை நாம் பாவிக்கின்றோம். பக்கற்றில் தயாரித்து அடைக்கப்படும் உணவுகளில் கூடிய உப்புச் சேர்க்கப்பட்டு இருக்கிறது. உதாரணமாக பிஸ்கற் வகைகள், கருவாடு, சூப் வகைகள், சோயா, அப்பளம், மோர் மிளகாய் முதலியன. ஆனால் எமக்குச் சராசரி ஐந்துகிராம் உப்புப் போதுமானதாகும். உணவில் கூடிய உப்பைச் சேர்ப்போமாகில், இரத்தத்தில், நீரின் அடர்த்தி கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தக்குழாய்கள் கூடியளவு இரத்தத்தை இருதயத்திற்குப் பாய்ச்ச வேண்டிய நிலைமை ஏற்படுவதனால் அதிஇரத்த அமுக்கம், பாரிசவாதம் முதலியன ஏற்பட முடியும். எனவே எமது உணவில் அளவாக உப்பைச் சேர்த்தல் இன்றியமையாததாகும்.

### ஈ. கூடிய இனிப்புணவின் பாவனை

குழந்தைகள், வளரிளம் பருவத்தினரில் கூடியளவு இனிப்பு உணவு, மென்பானங்களின் பாவனை அதிகரிப்பதனால் மேலதிகமான எடை கூடுவதை அவதானிக்க முடிகிறது. அத்துடன் இவ்விலக்கினரில் பலருக்கு முரசுவியாதி முதன்மை அடைவதைத் தவிர்க்க முடியாது. எனவே இனிப்புணவை அளவாக உண்பதோடு பற்களைக் காலையிலும் இரவு நித்திரைக்குப் போகுமுன்பும் துலக்குதல் இன்றியமையாததாகும்.

### உ. உடற்பருமன்

கூடிய அளவு கொழுப்பு, இனிப்புணவுகளின் பாவனையினால் நகரப்பகுதி பாடசாலை மாணவர்களிலும், உடல் உழைப்பு அற்ற மூத்தோரிலும் உடற்பருமன் கூடும் நிலையை அவதானிக்க முடிகிறது. மேலும் மாணவர்கள் தற்போதய போர்ச் சூழலினால் விளையாட்டுக்களில் ஈடுபடுவதும் குறைந்து கொண்டே போகிறது. அத்துடன் கணிசமான நேரத்தை சமூக மட்டத்தில் கூடிய பங்கினர் தொலைக்காட்சி பார்ப்பதனால் அப்பியாசமின்றியே காலத்தைக் கழிப்பதையும் குறிப்பிடலாம். வாழ்க்கை வசதி கூடக்கூட உடற்பருமன் ஓர்முன்னணிப் பிரச்சனையாக மாறுகின்றது. உடல் உழைப்பு இல்லாவிடின் நாம் உண்ணும் உணவில் கணிசமான பகுதி கொழுப்பாக மாற குழாய்களின் விட்டம் சிறுக்கின்றது. இதனால் நடுத்தரவயதை அடையுமுன்பே அதிஇரத்த அமுக்கம். பாரிசவாதம், சலரோகம், இருதய வியாதி என்பனவற்றுக்கு ஆளாகின்றோம்.

### ஊ. தேகாப்பியாசத்தின் அவசியம்

கடின உழைப்பும், தேகாப்பியாசமும் ஒருவரின் நீண்டகால வாழ்க்கைக்கு அத்திபாரமாக அமைந்து விடுகின்றன. சுகதேகியாக இருந்தாலென்ன. சலரோகம், அதிஇரத்த அமுக்கம், இருதய வியாதி, அஸ்மா இவைபோன்ற எவ்வகையானவராக இருப்பினும் தேகாப்பியாசம் மிகவும் இன்றியமையாததாகும். உதாரணமாக சலரோகத்தினாற் பாதிக்கப்பட்டவர் தேகாப்பியாசம் இன்றி இருப்பாராகில் இரத்தோட்டம் படிப்படியாகக் குறைவடையும் போது கை, கால் விரல்கள் உணர்ச்சி குறைவடைவதோடு, காயங்கள் ஏற்படின் புண்கள் மாறுதல் கடினமானதாகி விடுகின்றது. இவ்விதமானவர் தினமும் 30 -40 நிமிடங்கள் வரை வைத்திய ஆலோசனையுடன் வேகநடை மேற்கொள்ளுதல் இன்றியமையாததாகும். இதன் மூலம் இரத்தோட்டம் சீரடையும். இயல்பு வாழ்க்கை வாழுதல் இலகுவானதாக அமைந்து விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ. நித்திரையின் அவசியம்

சகல மட்டத்தினருக்கும் நித்திரை மிகவும் இன்றியமையாததாகும். வயது மூத்தோர் தினமும் 7 - 8 மணித்தியாலங்கள் நித்திரை கொள்ளுதல் மிகவும் அவசியமாகும். வேலைப்பளு, மன அமைதியின்மை ஏற்படும் போது நித்திரை கொள்ளுதல் சீர்குலைவதை எம்மால் உணரமுடிகின்றது. மன உளைச்சல் மேலோங்குவதனால் நித்திரை சீர்குலைவதோடு, ஓய்வு, மனஆறுதல் (Relax) பெறுவதும் குறைவு அடைய முடியும். சலரோகம், அதி இரத்த அமுக்கம், இருதய வியாதி, பாரிசவாதம் முதலான நோய்கள் அதிகரிப்பதற்கும் இவைகளே பிரதான காரணிகளாக அமைந்து விடுகின்றன.

புகைத்தலுக்கு ஆளாகுதல்

புகைத்தல் காரணமாக இரத்தக் குழாய்கள் விரிவடையும் தன்மையை இழந்து விடுகின்றன. மேலும் இக்குழாய்கள் சுருக்கமடைவதனால் புகைப்பவர்களுக்கு அதிஇரத்த அமுக்கம், பாரிசவாதம், இருதய வியாதி, சுவாசத் தொகுதி நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பானவர்களாக அமைந்து விடுகின்றனர்.

குடிபோதை

வசதி குறைவான சமூக அமைப்புக்களில் கணிசமான தொகையினர் மதுவுக்கு அடிமையாகின்றனர். பொருளாதாரப் பின்னடைவு மாத்திரமல்ல குடும்பத்தில் அங்கம் பெறுபவர்களின் முன்னேற்றமும் இதனால் சீர்குலையமுடியும்.

## 2. உளரீதியாக நாம் எம்மை நேசிப்பதன் அவசியம்

எம்மை நாம் நேசிக்காவிடின் அமைதிகுன்றியவர்களாகி விடுவோம். மற்றவர்களில் அன்பு பாராட்ட முடியாது கலக்க மடைவோம். தினம் தினம் ஏற்படும் தகராறுகள். வாக்குவாதங்கள். கடினமான வார்த்தைப் பிரயோகம் முதலியன ஆழ்மனத்தில் சுமைகளாக அமைந்து விடுவதுண்டு. இம்மக்கள் துன்பச் சுமைகளைச் சுமக்கும் சுமைதாங்கிகளாகக் காணப்படுவர். இதனால் பயம், கோபம், வெறுப்பு, துக்கம், அடித்துடைக்கும் மனப்பான்மை, விரக்தி, நித்திரையின்மை, பயங்கரக்கனவுகள், உரத்துச் சத்தமிடல் முதலியன மேலோங்கமுடியும். எனவே நாம் மற்றவர்களில் அன்பு பாராட்டக் கூடியவர்களாகவும். பண்பாளர்களாகவும் அமைவது இன்றியமையாததாகும். அடக்கப்பட்ட உணர்வுகளை வெளிக்கொண்டு வருதல் அவசியம். தேவை ஏற்படின் ஆற்றுப்படுத்தல் வேண்டும். கலை கலாசார நிகழ்வுகளில் பங்குகொள்ளுதல், சற்பங்கம், யோகாசனம், ஓய்வு நேரத்தைப் பிரயோசனமாகக் கழிப்பதன் மூலம் எம்மால் இயல்பு வாழ்க்கை வாழ முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. சமூகத்துடன் இசைந்து வாழ்வதன் அவசியம்

தனித்து ஒருவரால் மன நிறைவாக வாழமுடியாது குடும்பத்தார். அயலார். சமூகத்துடன் அன்பு பாராட்டக்கூடியவராகவும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் வாழ்பவராகவும் அமைதல் இன்றியமையாததாகும். குடும்ப அங்கத்தவர்களும் மனம் விட்டுப் பேசுதல் மிகவும் அவசியம். சகோதரர்களாகிலும் பகைமை பாராட்ட முற்படின் அக்குடும்பத்தில் அமைதி காண முடியாது. எம்மில் பிரதிபலிக்கும் குண இயல்புகள் யாவும், நம் சமூகப்பின்னணி கொண்டதாக அமைவதைக் காணலாம். நல்ல குண இயல்பு கொண்டவர்களுடன் இயைந்து வாழ்வோமாகில் எம்மை அறியாது நல்லகுண இயல்புகள் எம்மில் பிரதிபலிப்பதைக் காணலாம். ''நவில் தொறும் நூல் நயம் போலும் பயில் தொறும் பண்புடையாளர் தொடர்பு" - திருக்குறள்.

தாய், தந்தை, ஆசிரியர், சுற்றத்தாரில் இருந்தே குழந்தைகள். வளரிளம் பிள்ளைகள் தமது வாழ்வியல் அனுபவங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். எனவே மூத்தோரின் முன் உதாரணம் மிகவும் இன்றியமையாததாகும்.

## 4. ஆன்மீக நலனில் அக்கறை கொண்டவர்களாவோம்

ஆன்ம சிந்தனை மக்களுக்கு மிக முக்கியம். எமது மனத்தைப் பலவழிகளில் சிதறவிடாது ஒன்று குவிப்பதன் மூலம் எம்மால் மன அமைதி பெற முடியும். இதன் மூலம் உடல், உளம் சமநிலை அடையும். அயலார் சமூகத்தாருடன் இயைந்து வாழலாம். ஆன்மீகம் என்றால் என்ன? இவற்றை நாம் எப்படிச் சம்பாதிக்கலாம். அன்பே கடவுள் - அன்பே சிவம் என்பர். மற்றவர்களுக்கு நாம் எப்படி உதவலாம். அயலாருக்கு எப்படி நாம் சேவை செய்யலாம். நோயாளர், இயலாதவர், அங்கவீனர், வலு இழந்தவர், அனாதரவானவர் முதலானோருக்கு எப்படி உதவலாம்? இயன்ற சேவை உதவி முதலானவைகளை இயலாதவர்களுக்கு அளிப்போம். இறைவழிபாடு, பூஜை, ஜெபம், மந்திர உச்சாடனம், ஓம் காரம், கூட்டுப் பிரார்த்தனை, சற்சங்கம், தியானம், நாம சங்கீர்த்தனம் முதலானவைகளில் பங்குகொள்வோம். இதனால் ஆன்மீக நிறைவை எம்மால் பெறமுடியும். மன அமைதியுடனாய வாழ்வை அமைத்துக்கொள்வோம்.

5. கொழும்புத் தமிழ்ச் சங்கம் பலநன்நோக்குடைய பெரியோர்களின் நன்கொடை, ஆசிகள், வழிகாட்டல் மூலம் தமிழ் பேசும் மக்களுக்கு இலங்கையில், குறிப்பாகக் கொழும்பில் ஓர் கலங்கரை விளக்காகத் திகழ்வது எம் எல்லோருக்கும் பெருமை அளிக்கிறது. இப்பெருவிருட்சத்தின் நிழலில் பல மட்டங்களில் மனநிறைவு கொள்கிறோம். இன்று எமது சங்கம் ஓர் வள ஆலோசனை நிலையமாக அமைந்துள்ளது. கலை, இலக்கியம், கல்வி மேம்பாட்டில் அக்கறை கொள்வதோடல்லாமல், சமூக மேம்பாட்டு நிகழ்ச்சிகளில் பங்குகொள்வது பெரிய தவப்பேறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக்குழு 2005-2006

**தலைவர்**
திரு. கு. சோமசுந்தரம்

**பொதுச் செயலாளர்**
திரு. இ. க. கந்தசுவாமி

**நிதிச் செயலாளர்**
திரு. ச. பாலேஸ்வரன்

**துணைப் பொதுச் செயலாளர்**
திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி

**துணை நிதிச் செயலாளர்**
திரு. சி. சரவணபவன்

**உறுப்புரிமைச் செயலாளர்**
திரு. சி. அமிர்தலிங்கம்

**நிலையமைப்புச் செயலாளர்**
திரு. மா. சடாட்சரன்

**நூலகச் செயலாளர்**
திரு. தி. கணேசராஜா

**கல்விக்குழுச் செயலாளர்**
திரு. த. சிவஞானரஞ்சன்

**இலக்கியக்குழுச் செயலாளர்**
திரு. த. கோபாலகிருஸ்ணன்

**உள்ளக கணக்காய்வாளர்**
திரு. எஸ். பாஸ்கரா
திரு. த. பரமேஸ்வரன்

**துணைத் தலைவர்கள்**
திரு. ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்
திரு. இ. சுந்தரலிங்கம்
திரு. மு. கதிர்காமநாதன்
திரு. பெ. விஜயரத்தினம்
திரு. ஆ. குகமூர்த்தி
செல்வி. சற்சொரூபவதி நாதன்

**ஆட்சிக்குழு உறுப்பினர்கள்**
திருமதி. அ. புவனேஸ்வரி
திரு. ந. கணேசலிங்கம்
திரு. உடப்பூர் வீரசொக்கன்
திரு. மா. தேவராஜா
திரு. வ. சிவஜோதி
திரு. க.க. உதயகுமார்
திரு. வ. மகேஸ்வரன்
திரு. இரா. சடகோபன்
திரு. அ. பற்குணன்
திரு. டபிள்யூ. எஸ். செந்தில்நாதன்
திரு. க. குமரன்
திரு. பொ. சந்திரலிங்கம்
திரு. தெ. மதுசூதனன்
திரு. சோ. தேவராஜா
திரு. சி. எழில்வேந்தன்
திரு. கா. வைத்தீஸ்வரன்
திரு. ச. இலகுப்பிள்ளை
திரு. சோக்கல்லோ சண்முகநாதன்
திரு. ஜின்னாஹ் ஷரீபுத்தீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைய அமைப்புக்குழு

திரு. மா. சடாட்சரன் (செயலாளர்)

திரு. ஆ. குகமூர்த்தி (துணைத் தலைவர்)

திரு. ச. இலகுப்பிள்ளை

திரு. மா தேவராஜா

திரு. வெ. சபாநாயகம்

திரு. அ. பற்குணன்

திரு. தி. கணேசராஜா

திரு. சி. அமிர்தலிங்கம்

திரு. கா. வைத்தீஸ்வரன்

கல்விக்குழு

திரு. த. சிவஞானரஞ்சன் (செயலாளர்)

திரு. இரா. சுந்தரலிங்கம் (துணைத் தலைவர்)

திரு. வெ. சபாநாயகம்

திரு. ந. கணேசலிங்கம்

திரு. டபிள்யூ. எஸ். செந்தில்நாதன்

திரு. எஸ். எழில்வேந்தன்

திரு. சோ. தேவராஜா

நூலகக்குழு

திரு. தி. கணேசராஜா (செயலாளர்)

செல்வி சற்சொரூபவதி நாதன் (துணைத் தலைவர்)

திரு. இரா. சடகோபன்

திரு. பொ. சந்திரலிங்கம்

திரு. வ. சிவஜோதி

திரு. தெ. மதுசூதனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலக்கியகுழு**

திரு. த. கோபாலகிருஸ்ணன் (செயலாளர்)
திரு. பெ. விஜயரெத்தினம் (துணைத் தலைவர்)
கலாநிதி வ. மகேஸ்வரன்
திரு. எஸ். எழில்வேந்தன்
திரு. (சோக்கலலோ) தா. சண்முகநாதன்
திரு. தெ. மதுசூதனன்
திரு. ந. கணேசலிங்கம்

**உறுப்புரிமைக் குழு**

திரு. சி. அமிர்தலிங்கம் (செயலாளர்)
திரு. மு. கதிர்காமநாதன் (துணைத் தலைவர்)
திரு. அ. பற்குணன்
திருமதி. அ. புவனேஸ்வரி
திரு. மா. தேவராஜா
திரு. வ. சிவஜோதி
திரு. உடப்பூர் வீ. வீரசொக்கன்

**பதிப்புத்துறை**

திரு. கா. வைத்தீஸ்வரன் (செயலாளர்)
திரு. ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் (துணைத் தலைவர்)
திரு. க. குமரன்
திரு. ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
திரு. இரா. சடகோபன்
கலாநிதி வ. மகேஸ்வரன்


**பரிசில் நிதியம்**

திருமதி. அ. புவனேஸ்வரி (செயலாளர்)
திரு. ஆ. குகமூர்த்தி (துணைத் தலைவர்)
திரு. ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
திரு. எஸ். எழில்வேந்தன்
திரு. தெ. மதுசூதனன்
திரு. சோ. தேவராஜா
திரு. தி. கணேசராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி



# வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Keethaa Publication - 0777350088

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org